மகாமகோபாத்யாய, டாக்டர்
உ. வே. சாமிநாதையர் நூல் நிலையம்
அடையாறு, சென்னை-20.

ஓம்

கடவுள் துணை

அன்பளிப்பு

# குசேல வெண்பா.

இஃது

தஞ்சாவூர் ஜில்லா விஷ்ணம்பேட்டை
பிரம்மஸ்ரீ நாராயணையர் புத்திரரும்,
திருநெல்வேலிஜில்லா பெண்பாடசாலைகளின்
இன்ஸ்பெக்டரஸ் ஆபீஸ் ஹெட்கிளர்க்குமாகிய,

**நா. சேதுராமய்யரால்**

இயற்றப்பட்டு,

தச்சநல்லூர் ஸ்ரீமத். இலக்குமணப்போற்றிகள்
எழுதிய நான்முகத்துடன்

மதுரை,
தமிழ்ச்சங்க முத்திராசாலையில்,
பதிப்பிக்கப்பெற்றது.
கீலக-௵ ஆவணி மாதம்.
1908.
இதன் விலை அணா 8.

(Copyright Registered.)

உ

ஸ்ரீ.

சமஸ்தத்திலும் சமதிருஷ்டியுடைய

ஸ்ரீ. பாகவதோத்தமாளின்

ஸ்ரீ. பாதாரவிந்தங்களிலே

பக்திபூர்வமாய்

இந்நூல்

சமர்ப்பிக்கப்பட்டது.

# விளம்பரம்.

இப்புத்தகமும், வித்வான்-வெ. சண்முகம்பிள்ளை அவர்களால் இயற்றப்பட்ட "திருவிளையாடற்புராண சங்கிரகமும்" அடியிற்குறித்த விலைக்கு என்னிடம் பெற்றுக்கொள்ளலாம்.

| | | |
|---|---|---|
| குசேலவெண்பா | பேபர் பயிண்டு | அணா 8. |
| ஷை | காலிகோ | அணா 10. |
| திருவிளையாடற் புராண சங்கிரகம். | | அணா 4. |

தபாற்கூலி பிரத்தியேகம்.

**N. SETURAMA AIYAR,**

*Head clerk, Office of the Sub-Assistant Inspectress of Girls' Schools, Tinnevelly Girls' Range, Palamcottah.*

ஸ்ரீ:

# நூன் முகம்.

---

இந்நூலானது ஸ்ரீ. குசேலமுனிவரது திவ்ய சரித்திரத்தை விளக்குகின்றது. இச்சரிதம், பதினெண்புராணங்களுள் ஒன்றாகிய ஸ்ரீமத் பாகவதம் பத்தாவது ஸ்கந்தம் எண்பது எண்பத்தொன்று அத்யாயங்களிலுள்ளது.

குறித்த ஸ்ரீ. குசேலமுனிவர், அவந்திநகரத்தில் அவதரித்து, இளமையில் ஸ்ரீ. கிருஷ்ண பரமாத்மாவோடு, ஸ்ரீ. சாந்தீப மகாமுனிவர்பால் கல்வி பயின்று, பரஸ்பரம் அத்யந்தம் அன்புற்று வாழ்ந்தபின்னர், ஸ்ரீ. கிருஷ்ணபகவான், துவாரகாநகரத்தில் அரசுசெலுத்துங் காலத்தில், ஸ்ரீ. குசேலமுனிவர் கொடிய வறுமை நோயுற்றும், இரவாப் பெருமையும், மறவா அன்பும் உடையராய் நிகழ்வுழி, அவரது அன்பின் மனைவியின் வேண்டுகோளுக்கிரங்கித், தமக்கு பால சிநேகராகிய துவாரகாதிபதிபாற் சென்று, தம்மனைவி அளித்த அவற் பொதியை யவிழ்த்து, அப்பகவானுக்கு அர்ப்பிக்க, அவர் பேரவாவுடன் அதில் ஓர் பிடியைத் தமது அருமைத் திருவாயிற் கொள்ளவே, அவந்தி நகரத்தில், ஸ்ரீ. குசேலமுனிவருக்குச் சகல போக பாக்கியங்களும் தக்ஷணமே உற்பவிக்க, அதனை அக்குசேலமுனிவருக்கு அறிவிக்காமல், அவரை வந்த கோலத்தோடே திரும்பவிடுக்க, அம்முனிவர், அப்பகவானுடைய திருவடிதெரிசனம் பெற்ற பரமானந்தத்

தில் மூழ்கி, அவந்தி நகரம் வந்து, அவண் விளைந்துள்ள சகல செல்வங்களையுங் கண்ணுற்று, ஸ்ரீ. கிருஷ்ணபகவானுடைய பக்தவாற்சல்யத்தை நினைந்துருகி, பன்னாள் வாழ்ந்து, பரமபதம் பெற்றனர் என்பது இப்புண்யகதையின் சுருக்கமாம்.

இக்கதையை விளக்கும் இந்நூலானது, அவந்தி காண்டம், துவரைகாண்டம், வைகுந்த காண்டம் என மூன்றாகப் பகுக்கப்பட்டுள்ளது. அவந்திகாண்டத்தில், ஸ்ரீ. குசேல முனிவரது குணத்தின் பெருமையும், தரித்திரத்தின் கொடுமையும், செல்வநிலையாமை, யாக்கைநிலையாமை முதலிய விஷயங்களும், அம்முனிவர் துவாரகையை யடைந்ததும், துவரைகாண்டத்தில், முக்தரிலக்கணம், அன்பினிலக்கணம், பக்தவாற்சல்யம், சாதுசங்கபலன், பழமை முதலிய விஷயங்களுடன், அம்முனிவர் ஸ்ரீ. கிருஷ்ணபகவானைத் தெரிசித்து, அவருடன் சம்பாஷித்து உபசரிக்கப்பெற்று, அவலளித்து, அநுக்கிரகம் பெற்றுத்திரும்பியதும், வைகுந்த காண்டத்தில், அம்முனிவர் வறுமைநோய் நீங்கி, அளவிலாச் செல்வமுற்று ஸ்ரீ. பகவானுடைய தசாவதார மகிமையை ஸ்துதித்துத் திருவடி நீழலடைந்ததும், விரிக்கப்பட்டுள்ளன.

இச்சரிதமானது விருத்தப்பாவால் தென்மொழியிற் செய்யப்பட்டிருப்பினும், அதனை யாவரும் எளிதிலுணர்தலருமையாயிருப்பது பற்றி, வெண்பாவால் விளக்கப்பட்டிரு

க்கின்றது. இவ்வெண்பாவானது சொல்லமைதி பொருளமைதி பெற்று, படிப்போர்க்கு இலகுபோதம் தருவதாகின்றது. சிற்சில செய்யுள்கள் ஸ்ரீமான் புகழேந்திப் புலவரின் அருமை வாக்கை யொப்ப விளங்குகின்றன. ஆனால் அந்நூல்களில், அக்காலங்களில், வியவஸ்தை யின்றி பிரயோகமாகிய சில இடக்கர் மொழிகள், இந்நூலிற் காணப்படாமை ஓர் விசேடம். அன்றியும், இந்நூலாசிரியர், தமது கல்வித்திறமையைக் காட்டக் கருதாது, பக்தியின் வலிமையால் மட்டும், இந்நூலை இயற்றியதாகத் தெரிவதால், இதனை ஓர் அநுக்கிரக கிரந்தமாகவும் கொள்ள இடந்தருகின்றது.

இந்நூலினுக்கு மூலகிரந்தமாகிய ஸ்ரீ. பாகவதம் தசமஸ்கந்தத்தில் "பத்ரம் புஷ்பம் பலந்தோயம் யோமே பக்த்யா ப்ரயச்சதி, தத்அஹம்பக்த்யுபஹ்ருதம் அஸ்நாமி ப்ரயதாத்மந:" என்ற சுலோகத்தின் கருத்தினுக்கேற்ப, யாவரேனும் அன்புடன் தங்கள் தகுதிக்கு மிஞ்சாது, இயன்றவளவு ஓர் புண்யகர்மத்தைப் புரிவரேல், அதுவே அனந்தங்கோடியாக மதிக்கப்படுமாதலால், இந்நூலை ஆராய்பவர், வீண் தோற்றமின்றி, அந்தரங்க உண்மையோடு, தமது ஆண்டவனை வழிபடல் வேண்டுமென்பதும், அவ்வழிபாட்டிற்கு மிகுந்த செல்வம் வேண்டற்பாலதன்றென்பதும், அவ்வழிபாடுடையாரை ஆண்டவன் அளவின்றி ஆதரிக்கின்றனனென்பதும்

## நூன் முகம்.

இந்நூலால் உணர்வதுமட்டு மன்று, சுவத்சித்தமான அநுப வத்தாலும், கண்டுணரக்கூடியதாகின்றது.

இந்நூலை இயற்றிய ஸ்ரீ. சேதுராமய்யர் அவர்களுக்கு, இந்நூலைத் தொடங்குவதற்கு முன்னிருந்த பற்பல கஷ்டங் கள், இந்நூலைப் பாடி முடியுமளவில், அருகி நீங்கிவிட்டன வென்பது, உண்மைப் பிரமாணமாக வேற்படுகின்றது. ஆதலால், ஒவ்வொருவரும் இந்நூலைக்கற்றுணர்தல் அவசிய மெனத் தோற்றுகின்றது.

இந்நூல், அரசாங்கத்தின் கனம் டெக்ஸ்ட்புக் கமிட்டி யார் அவர்கள், ஆங்கிலப்பாடசாலைகளில் கீழ்தரப் பரீக்ஷை களுக்குக் குறிப்பிட்டால், மிகுதியும் நன்மை பயக்கும என் பது உண்மை.

| | |
|---|---|
| தச்சநல்லூர். கிலக வரு சித்திரைமீ அ. | இலக்குமணப்போற்றிகள். |

# சிறப்புப்பாயிரம்.

திருநயம் வித்வான் பிரமஸ்ரீ:

## மாதிரு பூதய்யர் அவர்கள் இயற்றியவை.

அறுசீரடி யாசிரிய விருத்தம்.

திருமருவு மணிமார்பன் றிருவடியைத் தினந்தோறுஞ் சிந்தைசெய்யும், ஒருமறையோ னென்மறையு முணர்ந்தகுசே லன்சரித மூலகில் யாரும், மருமலர்வி னறுந்தேனை வண்டினம் போல் விரும்பவெண்பா வாகச் சொன்னான், தருமநிறை கிருஷ்ணநகர்ச் சேதுரா மையனெனுந் தமிழ்வல் லோனே. (௧)

நேரிசை வெண்பா.

முக்கனியுஞ் சர்க்கரையு மூவா மருந்துமிதற்<br>
கொக்கு மெனப்புலவ ருண்மகிழ—இக்கவிஞன்<br>
சொற்று ளனந்தனிந்து தூய சுகுணனன்றி<br>
மற்றுரிவ் வாறியம்பு வார். (௨)

மகுலிபட்டணம் இந்து ஹைஸ்கூல் ஹெட்மாஸ்டர் பிரமஸ்ரீ:

திருநயம். சா. முத்துவையர் அவர்கள் பி. ஏ. இயற்றியவை.

நேரிசை வெண்பா.

விண்படுக்குஞ் சோலைத்தேன் வேரிப் பொருட்டன்னத்<br>
தண்படுக்கைப் பொய்கை ததும்பப்பாய்—பண்படுக்கும்<br>
விண்டுபுர வேதியர்தம் மெய்க்குலத்தி லுற்பவித்த<br>
தண்டமிழ்வா ழின்முகத்தான் சார்ந்து. (௧)

தேசா ரருங்கலைஞன் சேதுரா மய்யன்வசை
பேசாத வாய்மையினன் பெட்பினொடு—மாசில்குசே
லன்கதையை வெண்பாவா னடி நவின்றிட்டான்
என்கழறு வன்பெருமை யீங்கு. (உ)

சொல்லழகு மொண்பொருளிற் றோன்றழகுந் தூயவணி
நல்லழகும் வேறு நவைதவிரும்—பல்லழகும்
சேரப் புனைந்துரைத்தான செந்தமிழ்வெண் பாவிதனை
நேரொப்பி லாதபடி நேர்ந்து. (ங)

ஓதக் கடலமுதா லொண்புலவர்க் கூண்விருந்தொன்
றேதமற வீந்த விறைவன்போல்—நாதமலி
நற்றமிழி னலளித்தா னல்விருந்து நாவலர்க்குக்
கற்றபயன் தானுறுவான் கண்டு. (ச)

---

பின் காளமேகமெனப் பெயர்பெற்ற அருட்கவி பிரமஸ்ரீ:
**தென்திருப்பேரை: அனந்தகிருஷ்ணையங்காரவர்கள் இயற்றியது.**

(கண்ணனுக்கும் இந்நூலிற்கும் சிலேடை.)

**நேரிசை வெண்பா.**

அங்கங் கருமையா லர்த்தமிகப் பார்ப்பார்க்கே
இங்கிடலாற் சங்க மெடுக்கையால்—நங்கணனை
மான வழகாய் வழுத்தினன்கு சேலவெண்பா
மாநகர்வாழ் சேதுரா மன்.

---

திருநெல்வேலி தெற்குப்புதுத்தெரு கவிராஜ் மகா-ள-ள-ஸ்ரீ:
## நெல்லையப்பபிள்ளை அவர்கள் இயற்றியவை.

### அறுசீரடி யாசிரிய விருத்தம்.

அருந்துவரை யம்பதியை யரசுபுரிந் தவரைப்பூ தனை
தன் ஞவி, அருந்துவரை யம்பதின்ம ராமரமேழ் துளைத்த
வரை யரிக்கா வாமை, அருந்துவரை யம்பதிவேல் சுவறவுய்த்
தார் மாமடியை யவனி யினைக, அருந்துவரை யம்பதின்மர்
கொளாதுபெறப் பதமருளு மன்பி ஞரை. (க)

குன்றதனுன் மழைதடுத்த குழகரைமுன் ஞணட்புக் கொண்
டு மூதூர்ச், சென்றன்பிற் றெரிசித்துத் தீயவினை யொடுவறு
மை சேரச் செற்றுத், துன்றவருட் செல்வமொடு தொலை
வில்பொருட் செல்வமுற்ற தூயோன் மார்பின், மின்றருமுப்
புரிநூலன் வித்தகக்கு சேலனென விளங்கு மேலோன். (உ)

மேதகுநற் சரிதையினை வெண்பாவாற் பத்திமையின்
விளம்பித் திங்கள், ஆதவனு முளவரையும் புகழுடைந்தான்
விண்டுபுர மதுமுன் செய்த, மாதவத்தங் கந்தணர்தம் மர
புதித்தான் நாரணவேள் வரத்தில் வந்த, நீதமக வாஞ்சேது
ராமயபா ரதியிந்நீ ணிலத்திற் ருனே. (௩)

### நேரிசை வெண்பா.

விசேடப் பொருள்விளங்க வித்தகமு மேவக்
குசேலர் சரிதைவெண்பாக் கூறிச்—சுசீலக்கோ
விந்தனருள் பெற்றுனிம் மேதினியில் விண்டுபுரம்
வந்தசேது ராமமன்ன வன். (௪)

திருவிடை மருதூர் வித்வான். மகா-ஸ-ஸ-ஸ்ரீ-
## கோவிந்தசாமிபிள்ளை அவர்கள் இயற்றியவை.

### அறுசீரடியாசிரிய விருத்தம்.

திருவமிகு மில்லறத்திற் செறிந்தாலும் பெரியர்மனந் திறம்பா ரென்றோர், உருவமிகு மொழிதனக்கே யுரியதெனப் பலதிறத்தா லுலகிற் காட்டிக், கருவமிகும் படிகடந்த குசேல முனி சரிதையைவெண் கவியா லீந்த, பருவமிகு மவன்யா ரேயென்றிடிலிப் பாரீர்யாம் பகருவேமால். (க)

முத்திருந்துங் கயமிருந்தும் பசிதவிர்க்க முடிகுவதோ முதியோர் வாழுஞ், சத்திருந்த நாடெனினு மன்னமுணீர் தானிலவேற் சரிக்குவாமோ, சொத்திருந்து மில்லாரே போன் றிடுவ ரிவையிருந்துஞ் சோறு நீரும், வைத்திருந்தார் பெருமைதனை யித்தகைய தெனவுரைக்க வல்லார் யாரே. (உ)

நீர்நாடே யிவையிரண்டும் நெறிமுறையை வைத்திருக்கு நீணாடாகும், கார்நாடேர் கண்டனுமிந் நீர்நாட்டின் கவினதனைக் கண்டேயன்றோ, பார்நாடு மிந்நாடே நாம்பெரிதுங் கோவில்கொளும் படியதாமென், றூர்நாட்டின் பெருமைதனை யவனன்றி மற்றவரா லறையலாமோ. (௩)

நலமணக்குங் காவிரிமா நதிமணக்கு மிந்நாட்டி னடுவணுறும், புலமணக்கும் விண்ணேரில் மண்ணேர்க ளெவ்வெவையும் போற்றுமாறே, தலமணக்கு மறையுடன்முத் தீவளர்க்கும் வேதியர்க டலைவனுறைன், பொலமணக்கு நாரணப்பேர்ப் புங்கவனும் நாகம்மைப் புனிதையாரும். (௪)

மறைவழியே புரிதவத்தா லவதரித்தோன் மிருதியுரை வழிதப் பாதோன், கறைவழியார் கண்டனடி கனவினுமே மறவாதோன் கலைசேர் ஞான, நிறைவழியார் பாரத்வா சத் தவனார் கோத்திரமும் நெறியோர் தேற, அறைவழியா ராபஸ்தம் பப்பெயர்கொள் சூத்திரமு மமையப் பெற்றோன்.(௫)

தாரணியின முன்னோனே யாயிடினு முடன்பிறந்தார் தமினு முன்னோன், சீரணியார் மழநாட்டுப் பெரியசரண் மரபுடைநான் மறைதேர் செல்வன், ஏரணியார் பெண்களுக் குங் கல்வியருள் செய்தொழில்சே ரெழின்மை யாளன், ஆரணியார் கண்டனருளருந்தமிழின் கடல்கடந்த வறிவனுமால்.

சிரந்தரித்த மால்ராமன் சேதுபுரிந் திடலாலே சேதுராமத், தரந்தரித்த பெயர்புனைந்தான் மன்பதைகள் பவக் கடலைத் தணப்பா னெண்ணி, உரந்தரித்த நூற்கரையின் றுஞற்றுதலா னும்பர்களு முவக்கு மாற்றாற், பரந்தரித்த மால் சேது ராமனெனப் பெயர்புனைந்த பாவலோனே. (௭)

---

ஸ்ரீவில்லிபுத்தூர் ஸி. எம். எஸ். ஹைஸ்கூல் தமிழ்ப்பண்டிதர்
மகா-ள-ள-ஸ்ரீ.

மு. பொ. ஈஸ்வர மூர்த்தியாபிள்ளை அவர்கள் இயற்றியவை.

நேரிசை வெண்பா.

ஐயன் குசேல னருட்சரிதம் வெண்பாவால்
'வையத்தார் கொள்ள வழங்கினன்காண்—செய்யதிரு
மாதுராமன்போல் மறைநூற் பொருளுணர்ந்த
சோதுராமன்றான் சிறந்து. (௧)

கலித்துறை.

சொல்லும் பொருளுஞ் சுவையோ டணிபெற வேதொ
டுத்துக், கல்லுங் கரையக் கவியிசைத் தான்கரு மாமுகிலாஞ்,
செல்வன் குசேலற் கருள்செய் தியைச்சேது ராமனென்
போன், வெல்லும் பெரும்புக ழேந்தி கொலோவிவன் விள்ளு
மினே. (உ)

ஸ்ரீவைகுண்டம் மகா-ா-ா-ஸ்ரீ.

எஸ். ஞானசிகாமணி முதலியார் அவர்கள் பி. ஏ. இயற்றியது.

எண்சீரடி விருத்தம்.

சீதமணங் கமழ்துளப மாலைச் செல்வன்
சேவடியின் செல்வமே வேண்டி நின்ற
நாதனருட் குசேலன்றன் காதை முன்னோர்
நவின்றவழி விருத்தமென நவிந்தே யன்பின்
சேதுரா மையனின்று செப்பும் வெண்பாத்
தீந்தமிழின் சுவைவடிக்குந் தேனையுண்டேம்
ஓதுபுக ழேந்துநள வெண்பாப் புகழேந்
தியென்ன வுரைத்திடுவே முண்மை தானே.

---

இந்நூலாசிரியரின் இன்னுயிர்நண்பர் பாளையங்கோட்டை
மகா-ா-ா-ஸ்ரீ.

அ. வேணுவனலிங்கம்பிள்ளை அவர்கள் இயற்றியது.

நேரிசை வெண்பா.

கண்ணனடி யேகருதுங் காசிற் குசேலமுனி
உண்மைச் சரிதமதை யோதினன்—வெண்பாக்
கவியாகச் செய்தான் கவின்சேது ராமன்
செவியாரத் தேக்கிடவே தேர்ந்து.

இந்நூலாசிரியரின் இன்னுயிர் நண்பரும், திருநெல்வேலி டிஸ்டிரிக்டு கோர்டு பிளீடருமாகிய மகா-௱-௱-ஸ்ரீ. சி. பி. சுப்பய்யாபிள்ளை அவர்கள் பி. ஏ., இயற்றியது.

நேரிசை வெண்பா.

என்னதவஞ் செய்தனரோ விம்மகவைத் தான்பெறவே
மன்னுலகிற் றந்தையென மாண்புடையோர்—நன்னலமாய்
ஓதிடவுஞ் செய்ததுவே யுண்மையுயர் ஞானவின்ற
சேதுரா மய்யன் செயல்.

# பிழைதிருத்தம்.

| பக்கம். | பாட்டு. | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|---|
| எ | கச | உ | னண்ணொலியுங் | னன்ணொலியுஞ் |
| அ | கஅ | உ | பொறசிகரங் | பொற்சிகரங் |
| சு | உஅ | ரு | மாதைத் | மாதைக் |
| க0 | ருரு | ச | ளின்றுண் | ளீன்றுண் |
| கக | ருடு | ரு | ளோதார் | ளோதா |
| கந | ருஅ | க | றுன்சமைத்தாக் | றுன்சமைத்துப் |
| ரு0 | ருரு | ச | னிவ்வுண்மே | னிவ்வுண்மை |
| ருஎ | எகூ | க | கண்ணனிடம | கண்ணனிடம் |
| சுச | ருக | உ | வெப்புறமென் | வெப்புறுமென் |
| எஉ | கூஅ | உ | வண்ணனின் | வண்ணநின் |

# இந்நூல் அரங்கேற்றிய காலம் இடம்முதலியன.

நேரிசை வெண்பா.

கீலகஞ்சேர் மேடங் கிளரிருபத் தொன்றதனில்
வாலறிவர் முன்சேது ராமய்யன்—சீலமிகும்
*மங்கைநக ரப்பர் மடத்திலரங் கேற்றினுல்
பங்கமில்கு சேலவெண் பா.

---

* மங்கைநகர் என்றது பாளையங்கோட்டை.

ஓம்.

கடவுள் துணை.

# குசேல வெண்பா.

## தெய்வ வணக்கம்.

### நேரிசை வெண்பா.

#### விநாயகக் கடவுள்.

பார்புகழும் பத்தர் பரவுங் குசேலனது
சீர்புகழுங் காதையையான் செப்பவே—கார்புகழுங்
கைம்மா னமர்ந்த கடவு ளமர்ந்தபுழைக்
கைம்மா முகக்கடவுள் காப்பு. (௧)

#### திருமால்.

அன்பர்க் கெளியவரா யண்டமெலா மேன்மையுற
வன்பர்க்கு மாற்றவராய் வந்துதித்தோன்—துன்பமிகும்
வேழந் தனைக்காத்தோன் மெல்லியலா டன்னோடு
மாழ மமர்ந்தோ னரண். (௨)

## தக்ஷிணாமூர்த்தி.

வேத சிகையின் விழுப்பொருளே நால்வர்க்காப்
போதுங் குருவடிகள் போற்றினே—னாதவனைப்
பார்த்த பனிபோற் பறந்ததே யென்னெஞ்சம
போர்த்த பழுதார் புரை. (௩)

## சுகர்.

வேதந் தெளித்த வியாசமுனி முன்பொருநா
ளோதி யழைப்ப வுலகெல்லாம்—பேதமற
வொன்றாகி யேனென் றுரைக்கவெலா மாஞ்சுகரி
னன்றாகுந் தாண்மலரை நாடு. (௪)

## ஸ்ரீசங்கராசாரியர்.

தத்துவங்க ணீங்குந் தனியிடத்தே தான்றோன்று
மத்துவித மார்க்க மறைவித்தென்—சித்தமதைத்
தான்கொண்டான் சங்கரா சாரியனு மெங்குரவன்
வான்கொண்ட பேறடைந்தேன் வாய்ந்து. (௫)

## அடியார்.

ஈச னடிபரவி யின்புடனே யன்னோன்சீர்
நேசமுடன் கேட்டு நெகிழ்ந்துருகிப்—பாசந்
தனையறுத்த சான்றோர் தமைப்பணியி னென்றும்
வினையறுத்து மேவிடலாம் வீடு. (௬)

# குசேல வெண்பா.

## நூற்பயன்.

இம்மையிலே பெசசுகமு மெய்தியபி னின்பமுட
னம்மையிலே வீடு மடைந்திடுவர்—செம்மையிலே
வாழுங் குசேலமுனி வான்சரிதை தான்கேட்டுத்
தாழும் புவிமனிதர் தாம். (௧.)

## நூல்செய் காரணம்.

சும்மா விருந்தேழைத் தூயோன் குசேலமுனிப்
பெம்மான் சரிதமதைப் பேசென்றே—யெம்மான்போற்
சண்முகனே சொல்லச் சடலப் பயனென்றே
பண்முகமாப் பாடினனிப் பா. (௨)

## அவையடக்கம்.

எப்பொருள்யார் தானே யியம்பிடினு மெஞ்ஞான்று
மப்பொருளின் மெய்ப்பொருளை யாய்ந்திடுத—லிப்புவியி
லான்றோர் குணமென் றருட்குசே லன்சரிதந்
தோன்றவுரைத் திட்டேன் றுணிந்து. (௩)

ஆகச்செய்யுள் - ௩

---

ஸ்ரீ

# நூல்.

## முதலாவது

## அவந்தி காண்டம்.

---

பாருலகம் போற்றப் பரிட்சித்து வேந்தனுமே
சீருலவச் செங்கோல் செலுத்துநாள்—வேருடனே
பந்தந் தனைக்களைந்து பற்றறவே நின்றசுகன்
வந்தணைந்தான் மன்னன் மருங்கு. (௧)

வந்தமுனி பாதம் வணங்கித் தகுமுகமன்
சிந்தை மகிழ்தூங்கச் செப்பியுயர்—புந்திமிகும்
பேரார் குசேலன் பெரும்புகழைத் தான்வினவச்
சீரார் முனியுரைப்பான் றேர்ந்து. (௨)

காயயளாம் மாடக் கடிநகர மார்கலிசூழ்
தேயத் திலக மெனச்சிறந்தே—தூயதோர்
பொன்னு டெனப்பொலியும் பொற்பார் வடமதுரை
நன்னு வலர்வாழ் நகர். (௩)

அந்நீ ணகர்ப்பாங்க ரந்நலா ரூடியெறி
தந்நீண் மணிக்கலங்க டாமின்னித்—துன்னீ
ளிருண்மாயப் பொன்னுலக மேய்ப்ப விலங்கும்
அருண்மா நகரவந்தி யால். (௪)

வாசக் கருங்கூந்தன் மாதரார் நீர்குடைய
வீசுங் களப விரைநீர்தான்—தேசமெலாங்
கானாறுப் போந்து கடலி னிடைவீழ்ந்தே
மீனாற்றம் போக்கும் விரைந்து. (ரு)

கோதை மடமாதர் கொண்டணியும் பொற்சிலம்பே
யேத மெனநின் றிரப்பனவாங்—காதையளாம்
நேத்திரமே காதுவன நீணுதலே கோடுவன
காத்திரமே காந்துவன காண். (சா)

காயவழி செல்லுங் கதிரவனுந் திங்களுமே
போயகல மாட்டாமற் போந்துபுறம்—நேயமுடன்
றங்குந் திகழ்பொறிகள் சார்ந்த மதிற்கதவ
மங்கு திறக்கமய மாய்ந்து. (எ)

கண்ணன் கருமேனி காண்பான் குசேலனது
தண்ணன் கமலமலர்த் தாள்பரவத்—திண்கடலேழ்
வந்தணைந்தாற் போன்றதே மாக முகடுரிஞ்சு
மந்த மதில்சூ ழகழ். (அ)

தோமனைத்துங் காயுந் துறவிகளை யுங்காயுங்
காமனையுங் காயுமொரு கண்ணுதலுங்—காமுறப்
போகந் தனைவிற்கும் பொன்னனையார் பன்மறுகு
மாக முயர்ந்தோங்கு மால். (கூ)

வந்தவிருந் தூட்டி வருவிருந்துந் தாமோம்பி
நந்தலினன் னாவலர்க்கு நல்கியே—சிந்தைகளி
தூங்கநா லாய்பின்னோர் தொன்மறுகு பொன்னவிர
வாங்காங் கொளிர்வனவே யாம். (கO)

மூவுலகு மேவெஃகு மும்மைப் படுபொருளும்
நாவுலவு மின்சொ னயப்பொருளுந்---தேவுலகும்
நாணத் திகழுமே நல்வா ணிபர்வாழும்
மாணமதிப் போங்கு மறுகு. (கக)

மருமத் தயில்பாய மாறேற்கும் வன்போர்க்
கருமக் கருங்கழலார் காலின்---பெருமொலிபோய்
மாந்தர்வாழ் மண்ணுலகோ வானுலகுந் தான்மண்டும்
வேந்தர்வாழ் வீதிபல வே. (கஉ)

ஒருமூன்று தீவளர்க்கு முய்த்துணர்வே தத்தோ
டிருமூன்று நூலோது மென்றும்—வருமூன்று
காலந் தெரிந்துணர்த்துங் காசகன்மா வேதியர்வாழ்
சீலமறு கோங்குஞ் சிறந்து. (கங)

வேத முழக்கொலியும் விண்ணுண் முரசொலியும்
நாதமிகு மாவணத்தி னண்ணொலியுஞ்—சாதமளித்
தூட்டு மவரொலியு மொண்கணிகை யாட்டொலியு
மோட்டுமே யோத வொலி. (கச)

இம்மா நகரொருசா ரேலங் கமழ்சாரற்
கைம்மாக் கரடக் கலுழியுமிழ்—வெம்மாவி
தேய்க்குமுயர் ஞாழலகிற் றேவதா ரம்மலிவா
னேய்க்குமுயர் கானமுள தே. (கரு)

கானத் தொருசிறையே கானக் குறமகளிர்
மானக் கரியோடு மாறுசெய—வேனக்
குருளை யுரப்புநெடுங் கோளரிமாக் குன்றம்
வெருளக் கிடந்ததே விண் (கசு)

மழைபடியு மம்மா மலைமீதி லென்றுங்
குழைபடியும மாமுனிவர் கூட்டங்—தழைபடியுந்
தாருவினோ டும்பொலியத் தங்கு முயர்சேரி
மேருவினின் றோங்கும் வியந்து. (௧௭)

நிலனூறி வானிவந்து நீண்டதரு மேவிக்
குலனூறும் பொறசிகரங் கொண்டு—நலனூறத்
தேமதியந் தோய்ந்தமரர் சிந்திக்க நின்றதே
தூமதியோர் குன்றத் தொடர். (௧௮)

சரியைமுதல் ஞானச் சதுர்விதமும் வேதம்
விரிதருமெய்ந் நூலின் விளக்கும்—பெரியதோர்
போத விருத்தியுமே பொற்பிற் பொலியுமாற்
சீத முனிவரரின் சேர்வு. (௧௯)

தழலோம்பி யைந்தவித்துத் தத்துவந்தேர் ஞான
நிழலோம்பு நீணெறியோர் நித்தங்—கழலோம்ப
நின்ற வரைப்புறத்தோர் நீலமணி வண்ணனருட்
குன்றமென வோங்குங் குணன். (௨௦)

குணமேறித் தானதவக் குன்றேறிக் கண்ணன்
மணமேறும் பாதமலர் வாக்கிற்—கணமேற
வேறமனத் தேயிருத்தி யேதப் புரையாறு
மாற மகிழ்ந்தான் வகிந்து. (௨௧)

சீடர் திறனோக்கிச் செப்புசாந் தீபனிடம்
பீடருந் தெய்வப் பெருமறைக—ளேடவிழ்த்து
முக்குற்ற மோட முழுமுதலாங் கண்ணனுடன்
பக்குவமாய்க் கற்றான் பரிந்து. (௨௨)

வேதமே தானாய் விளங்கும் பொருடானாய்ப்
போதமே தானாய்ப் பொலியுமொரு—நாதமே
தானாய்த் திகழ்கண்ணன் றன்னுடனே தான்பயில
வானா வருள்பெற்றா னால். (௨௩)

அழுந்துபசித் தீயாற்றி யாக்கைகனி வாடச்
செழுந்தசையும் வற்றித் திகழ்ந்தான்—தொழுந்தகையர்
செய்யா விரதமெலாஞ் செய்து மறைக்குலத்தார்
பொய்யா வொழுக்கம் புகுந்து. (௨௪)

சந்திசெபம் வந்தனைசள் சாற்றுமுக் காலவழாப்
புந்தியுடன் செய்தொளிரும் புண்ணியவா—னைந்தவியத்
தற்போதந் தானழுவத் தானே பிரமமதா
யற்போத நீக்கு மவன். (௨௫)

மெத்தியபல் கந்தைதுணி மெல்லிழையி னாற்பொல்லம்
பொத்தியதை நல்லுடையாப் பூணுதலா—லெத்திசையுங்
கோதிற் குசேலனெனக் கூறு முயர்நாமந்
தீதறவே பெற்றான் சிறந்து. (௨௬)

மந்திரமா வேதம் மதித்தறியா மாலடியைச்
சிந்தையினி லெஞ்ஞான் றுஞ் சேவித்து—நந்தலிலாப்
பூசனைக ளாற்றிடுவான் புண்ணியனா மிம்மறையோன்
வாசனைகொள் பூவான் மகிழ்ந்து. (௨௭)

இன்னதவத் திற்கிணங்க வேற்றதுணை யாமறையோன்
வன்னெடுவேள் மீளி வரகுணனே—முன்னஞ்
சலியாத் தவப்பயனாற் சாருமோர் மாதைத்
கலியாணஞ் செய்தான் கனிந்து. (௨௮)

காந்த னுடல்காப்பாள் காதன் மனையென்றே
சாந்த குணமேலோர் சாற்றுமொழி—யேந்தெழிலா
ரிம்மான் செயனேக்கிப் போலு மியைந்தகுண
மம்மா வுடைய ளவள். (உகூ)

நாண முதலனைத்தும் நன்கமைய நானிலத்தின்
மாண மறைக்குலத்தே வந்துதித்தாள்—காணக்கண்
காட்சியெனக் கண்டோர் கனிந்துருகக் கற்பமையும்
மாட்சிதனைப் பூண்டாண் மகிழ்ந்து. (௩0)

வருவிருந் தூட்ட மனங்கொள்ளுங் காந்த
னொருவிருந் தன்னு னகத்திற்—கருதியதை
யோர்ந்தாற்று முண்மையையே செப்பு மொருவரையு
நேர்ந்தலர்சொற் றாற்றிடா ணின்று. (௩க)

கோதின் மகவுடையார் கூடுகதி நாததியெனத்
தீதின் மறையெடுத்துச் செப்புதலாற்—கோதையுடன்
பொன்குலவு மார்பனையே போற்றுகுசே லன்சேர்ந்தான்
றன்குலமே யோங்கத் தழைத்து. (௩உ)

சேர வுடல்பொருமச் சேனயன முட்குழியப
பார முலைவீங்கிப் பால்சுரப்ப—வேரவிருந்
தோன்று மிடைதோன்றத் தோகைசில வாண்டிற்கு
ளின்றுண் மகவிருபத் தேழு. (௩௩)

செல்வமகள் வாழ்வுற்றோர் சிந்திக்க வோர்மகவுங்
கல்விமகள் காந்தன் கருணைசெயான்—செல்வமகார்
பத்தும் பதினேழும் பார்புகழப் பாலித்தான்
கத்துங் கழல்வேந்தே காண். (௩௪)

காதலினொ டுள்ளக் கருத்தின் பயன்வாய்ப்ப
வேதமிலா நன்மைந்த ரீன்றாரை—மாதவன்றா
ளோதாதார் ருறுவினைபோ லூற்றுப் பிடித்ததே
தீதார் மிடியென்னுந் தீ. (௩௫)

பல்லனைத்துங் காட்டிப் பலர்நகைக்கக் கைநீட்டிச்
சொல்லனைத்துஞ் சூட்டிமுகச் சோர்வூட்டி—மல்லலைத்தும்
மானமுட னோட மனைகடொறு மெஞ்ஞான்று
மீனமுட னேற்பதிழி வே. (௩௬)

ஏற்ப திகழ்ச்சியெனு மின்சொற் கடைப்பிடித்து
நோற்ப தனைநோற்கும் நுண்ணறிஞன்—தோற்குழுவாழ்
கானவாய் நீவாரங் கண்டுறக்கிக் கொண்டுவப்பான்
தேனவா மின்மொழிபாற் சேர்த்து. (௩௭)

சேர்த்தநீ வாரமதைத் தீஞ்சுவையிற் றான்சமைத்துக்
பார்த்ததிதிக் கோர்பாகம் பங்கிட்டுச்—சீர்த்தமனை
தானளிக்கத் தானயின்று தாமோ தரன்பாதந்
தேனளிக்கத் தேக்கிடுவான் றேர்ந்து. (௩௮)

இங்ங னிவனிருப்ப வின்புடையம் மைந்தர்க்கு
மங்ங னடிசில்வாய்க் காற்றாமை—யெங்ஙன்கொல்
கண்டு மனமுடையாள் காந்த னிடமொன்றும்
விண்டு மொழியாள் வெறுத்து. (௩௯)

ஒருமகவுக் கீயுங்கா ளோர்மகவெற் கென்னு
மிருமகவும் மும்மகவு மேற்கு—மருமகவு
ளொவ்வொன் றழுப்புரளு மூடுமுகம் வாடுமே
லெவ்வமு றாதென்செய்வா ளே. (௪0)

அம்மா வுணவின்றி யாற்றாம லெம்வயிறு
சும்மா கிடந்து துடிக்குதெனத்—தம்மாவி
போகநிற் கின்றாரைப் பூங்கையாற் றானணைத்துச்
சோகமுறச் சோர்வா டுவண்டு. (௪௧)

பக்கத்துப் பாலரின்கைப் பக்கணங்கண் டோடிப்போய்
நெக்குருகிக் கண்ணின்றும் நீர்ததும்ப—மிக்கழுதே
யின்னா னிதுவயின்றா னென்வாயு மூறுதலா
லன்னாயிப் போதே யருள். (௪௨)

வேறு மனைச்சிறுவன் வீட்டின்க ணட்டகறிக்
கூறுமுத லானவெலாங் கூறென்றான்—கூறுவகை
யின்னனவென் றன்னவையு மெச்சுவைகொ ளீயென்றே
யன்னையுடை யீர்த்தே யழும். (௪௩)

சுட்டிமுதற் பல்கலனுந் தோன்ற வயன்மாத
ரிட்டமுடன் றம்மகவுக் கிட்டாரான்—மட்டகல
வீழ்தாயே யெங்கட்கும் வேண்டுமவை யீயெனக்கண்
வீழ்நீர் பெருக்குநிலம் வீழ்ந்து. (௪௪)

இவ்வண்ண மொவ்வோ ரிளமகவு மேந்திழைபான்
மைவண்ணக் கண்ணீர் வடிக்குதலுஞ்—செவ்வண்ணக்
கைந்தலத்தாற் றானணைத்துக் காதலரை யோர்விதத்திற்
சித்தநொந் தாற்றிடுவா ளோர்ந்து. (௪௫)

பூணூலே பொற்பூணும் பொற்கலையே வற்கலையா
மாணூண் பரிகலமே மாவிலையாம்—வாணோக்கி
யன்பி னளிக்கு மனப்பாலே யாப்பாலா
மின்புதல்வர்க் கெஞ்ஞான்று மே. (௪௬)

கோடிபொன் னுள்ளார்க்குங் கோதி லொருமதலை
நாடிபவா றேம்ப னனியரிதா—னீடுதுயர்
வெவ்விடமாய் வாட்டு மிடியிற்பன் மக்கடமை
யெவ்விதமாய்க் காப்பா ளிவள். (௪௭)

வெம்மை மிடிக்கடலில் வீழ்ந்துமனம் புண்ணாயுஞ்
செம்மைமனக் காந்தனிடஞ் செப்பிடா—னிம்மைதனின்
முன்செய் தவமுடிக்க முன்னிட்டு நிற்குமிவ
ளின்செய் சுகுணமென் னே. (௪௮)

நேர்ந்தமிடிச் சாகரத்தை நீந்துவதெவ் வாறெனவே
யோர்ந்தொருநா ளுன்னி யுளந்துணிந்து—கூர்ந்தமதிக்
காந்தனடி போற்றிக் கழறிடுவா டன்கருத்தைத்
தீர்ந்தண் மொழியா டெளிந்து. (௪௯)

பொற்பின் மிடியிலுமே போயேற்ற றாழ்வென்றே
கற்பித்த மூதுரையைக் கைக்கொண்டாய்—நற்புனித
நானதையே யோர்ந்து நவிலுமென்றன் புல்லுரைக
ளானவையே கேட்டருள்க வாய்ந்து. (௫0)

மைந்த ரனமின்றி வாடி மிகவருந்திச்
செந்தளிர் மேனி தியங்கினரே—யைந்தவித்தோ
யின்னடிசி லாற்புவியி லின்னுயிர்தா னிற்குமென
நன்னெறியோர் சொல்வார் நயந்து. (௫௧)

மன்னு முயிரனைத்தும் வாழ்கநன் கென்றென்றும்
பன்னுமறை தேர்ந்து பகர்ந்திடலான்—மன்னவனே
மைந்தர் நனிவாழ்தன் மாண்பன்றோ வென்றுரைத்தா
ளிந்து முகத்தா ளெடுத்து. (௫௨)

ஆக்கம் படைத்தோ ரருந்தவ ரக்கிலா
ரேக்கமுறு பாவியரா மிவ்வுலகி—னோக்குங்கால்
காந்தனே யென்றாள்சீர்க் கற்புடைய மாதரார்
போந்தேத்த நின்றாள் புலர்ந்து. (௫௩)

வனப்பழிக்கும் வாய்மை நலனழிக்கும் மான
நினைப்பழிக்கும் நெஞ்சஞ் சிதைக்கும்—வினைப்புகுத்துங்
காதலிகாந் தர்க்குட் கலாம்விளைக்குங் காசினியில்
வேதனைகள் செய்யு மிடி. (௫௪)

அல்லல் புரிந்தே யழித்தாலுந் தீமிடியி
னல்லவனுங் கூற்றுவனே நானிலத்திற்—சொல்லுங்கால்
கூற்றோ வுயிரொன்றே கொல்லுங் கொடுமிடியோ
போற்றுகுண முங்கொல்லும் போந்து. (௫௫)

இன்ன வறுமையினை யென்று மொழித்திடுதல்
சொன்னகலை நன்றென்றே சொல்லிடுமே—மன்னவனே
வேதசிகை யோர்ந்தவனே வித்தகனே யென்றுரைத்தாள்
சீதமொழி வாயா டெளிந்து. (௫௬)

பொன்னவிரும் மார்பனுடன் போற்று மறைமுழுதும்
நன்னலமாய்க் கற்றகனு னற்றவத்தோ—யன்னவன்பாற்
செல்வங் கொடுவந்தெஞ் சேய்களேனைப் தீர்த்திடென
வில்வதனத் தாளுரைத்தாள் வீழ்ந்து. (௫௭)

துட்ட ரகமழலத் தூயோ ரகங்குளிர
விட்ட முடன்றோன்று மெந்தபா—னட்டநீ
தாவிற் பெருஞ்செல்வந் தாவெனுமுன் றந்தருள்வா
னுவலுடன் செல்வீ ரவண். (௫௮)

மற்றவன் றன்மறுக்கில் வானவர்க்கா நல்லமுதீந்
துற்றவன தொண்சேவை யுண்டாகும்—பற்றற்றோய்
பொய்யாப் புகழின்பும் போது மெனவுரைத்தான்
மையார் விழியாண் மதித்து. (௫௯)

கண்ணனை யன்பர் கருத்துள்வாழ் நீலமணி
வண்ணனை யெய்திநம் மக்களுய—வெண்ணினிதி
நண்ணிவா வென்றிடலும் நங்கை முகநோக்கித்
தெண்ணிலையான் செப்பிடுவான் றேர்ந்து. (௬௰)

மைந்தர் தமக்கிரங்கி வாடும் மடமயிலே
முந்தை யருந்தவங்கண் முற்றுவித்தோர்—நந்தலிலா
வின்பந் தனையடைவ ரேனையோர் வெந்துமனத்
துன்பந் தனையடைவர் சூழ். (௬௧)

மக்க டமைப்போற்ற மாநிதியம் வேண்டிநீ
யிக்கனைய சொல்லா யிருஞ்சிறையார்—பக்கமாப்
பல்லுயிர்க்குச் செல்வம் பணமுண்டோ சொல்லென்றான்
சொல்லுணர்வி னின்றோன் றுணிந்து. (௬௨)

சொல்லிய வவ்வுயிர்கள் சோர்ந்தேற்ற றனுண்டோ
புல்லியசோ றின்றியுயிர் போயிற்றோ—மெல்லியலாய்
நாளையுண விற்கா நலியுபோ வின்றென்றான்
வேலை வெகுண்டோன் விரைந்து. (௬௩)

கருப்பையண் டத்துயிர்க்குங் கல்லமர்தே ரைக்கும்
விருப்புண வூட்டும் விமலன்—மருக்குழலாய்
நின்மைந்தர்க் காவாது நீங்குவனோ வென்றுரைத்தான்
சென்மக் கடல்கடந்தோன் றேர்ந்து. (௬௪)

அலரவன் றீட்டிவைத்த வாயுண் முழுது
மலரவிர் கூந்தலெழின் மாதே—நலமுறுநின்
மைந்தர்க் கனமுண்டாம் மாழ்க லெனவுரைத்தான்
பந்தங் களைந்தோன் பரிந்து. (௬௫)

கொலைகளவு பொய்யாசை குய்யம் முதலாம்
பலதீ வினைப்பாற் படுத்துஞ்—சலதியுறை
யெம்மா னடிக்கமல மேத்து மிசையுடையார்
தம்மால் வெறுக்குந் தனம். (௬௬)

வாக்கிருந்தும் மூங்கையராய் வாய்ந்தமரை போலிலங்கும்
நோக்கிருந்து மந்தகராய் நுண்செவியின்—போக்கிருந்து
மில்லாரா யென்று முயிர்ப்பிணமா யாக்குமே
பொல்லாரே யோற்றும் பொருள். (௬௭)

பிறந்திடும் போது பிறவாது மாந்த
ரிறந்திடும் போது மிறவா—துறைந்திடும்
மத்தியிலே தோன்றி மறைந்தின்னல் செய்நிதியை
நத்திடார் நல்லோர் நயந்து. (௬௮)

பாசந் தனையறுத்துப் பங்கமிலா மெய்ஞ்ஞான
நேசந் தனையுடையார் நெஞ்சமதிற்—காசகல
வாழ்குழலான் வான்பதமே வாய்க்க மகிழ்வதுவே
தாழ்குழலாய் மூரித் தனம். (௬௯)

புன்புலால் யாக்கை பொருளாப் பொருளிலதா
லன்பிலார் மைந்தர்க் ககமழிந்தா—யென்புலா
மூனடுத்த நாண்முதலா யுற்றகன்ற தோர்ந்திலையே
தேனடுத்த சொல்லாய் தெளி. (௭0)

முன்பெத் தனைமைந்தர் மூதுலகிற் பெற்றனையோ
பின்பெத் தனைபேர் பெறுவையோ—கொன்பெற்
றிம்மைந்தர் மைந்தரென வெங்ஙனிசைகுவதே
மைம்மைந்தை நீக்காய் மதி. (௭௧)

தாயார் மனையார் தனையரார் சாற்றிடுநா
னீயாரென் றெண்ணலையே நேரிழையே—வேயாருந்
தோளாய் மதித்துணராய் சொன்மயக்க மென்றவர்சொற்
கேளாயிம் மாயங் கெடு. (௭௨)

கேடென் றிவைவிடுத்துக் கேடில்லா ரின்பத்தும்
நீடு துயரிடத்தும் நேர்நின்றார்—தோடவிழ்பூங்
கோதாயவ் வாறேநீ கோபாலன் கொங்கலரும்
பாதார விந்தம் பணி. (௭௩)

அந்தணன் மாற்ற மனைத்துமே யஞ்செவியிற்
சிந்தையுடன் கேட்டுத் தெளிவுற்றும்—மைந்தர்பால்
வைத்தமயன் மாறாது மன்னனிடை மாறும்
பொய்த்த நுசுப்பாள் புலர்ந்து. (௭௪)

தீதி லருமுயற்சி செய்யா துறுங்கொல்லோ
வோதி லுயர்செல்வ மொண்புவியிற்—போதி
லவனனையா யென்றுரைத்தாள் யார்க்குமெஞ் ஞான்றும்
பவநினையாப் பாவை பரிந்து. (௭௫)

நன்னிலமே யானாலும் நாடி நனியுழுது
தன்னிலையே தானுணருஞ் சான்றவனே—மன்னியநல்
வித்திடாற் குற்றிடுமோ மேவுபய னென்றாள்சொல்
தித்திடா நின்றகிளை தான். (௭௬)

எம்மான் றருமெனவே யென்றும் முயல்வின்றிச்
சும்மா விருந்தாற் சுகமென்ன—வம்மா
வடைகுவதோ செல்வ மறைந்திடுவா யென்றாள்
பண்டகுவளைக் கண்ணாள் பரிந்து. (எஎ)

தீதிற் றிரௌபதையுந் தேர்பிரக லாதனுமே
யோதி யழைத்தலினா லும்பர்கோன்—கோதிலாய்
வந்தாண்டா னன்றேல் வருவானோ மன்னவனே
செந்தா மரைக்கண்ணன் றேர்ந்து. (எஅ)

என்றுமுலை யாமுயற்சி யெண்ணியவை முற்றுவிக்கும்
வென்றபுல னாதா வியனுலகின்—மன்ற
முயற்சி திருவினை யாக்கு முயற்றின்மை
யின்மை புகுத்தி விடும். (எகூ)

கண்ணன் கழலிணையே கண்டாய் களைகணாத்
தெண்ணன் மனம்வாய்ந்தாய் தேசிகனே—விண்ணவர்கோன்
போற்று மவன்பாற் பொருளிரக்கி லென்னென்றாள்
சாற்றுமயிற் சாயலா டாழ்ந்து. (அ0)

அணைந்தோ ரெவரேனு மாதரித்தன் மாயந்
தணைந்தோர் தமக்குந் தகவே—யுணர்ந்தோயுன்
மக்களையு மென்றனையும் மாளா வறுமையினில்
வைக்கக் கடனோ வழுத்து. (அக)

மைந்தர் தமக்கிரங்கி வாடும் மனைவியவள்
சிந்தை நனிநொந்து செப்பியதைப்—புந்தியிலே
தானினையாத் தண்டுவரை போகத் தலைப்பட்டா
னானினியல் புள்ளா னவன். (அஉ)

பைந்துளவ மாயவனைப் பார்த்தாற் பவநீங்கும்
நைந்தவிவ ளெண்ணம் நனிநிரம்புஞ்—சிந்தைதனி
லென்றுன்னிச் செப்பிடுவா னேந்திழைபால் யாவருமே
முன்றுன்னிப் போற்றும் முனி. (அங)

தெய்வங் குருவிறைமுன் செல்வோ ரருள்வேண்டிக்
கைவந்த கொண்டுவந்து காண்குவரான்—மைவந்த
கண்ணாய் கழறிடுவாய் கையுறையா தென்றான்சீர்ப்
பண்ணோர் மறையோன் பரிந்து. (அச)

காந்தனுரை கேட்ட கணமே யுபவாசங்
கூந்த லிளங்குயிலுங் கொண்டேற்றா—ளேந்தலரு
ணல்லினிற்றன் பாகம் நெடுநாள் வரைசேர்த்தா
ளல்லலறச் செய்தா ளவல். (அரு)

செய்த வவறன்னைச் சீர்மறையோன் கந்தையினிற்
பெய்து முடிந்தே பிதிராம—லெய்ததுயர்
நீங்கக் கணவன்கை நீட்டினாண் மற்றதனைத்
தாங்கினான் றண்ணளியான் றான். (அசு)

முன்பு நடந்தறியான் மூவா முதலருளுந்
தன்புயமுந் தாந்துணையாத் தண்டுவரை—யன்புடனே
மார்க்கமதைக் கேட்டு வழிநடந்தான் சென்மமகன்
மார்க்கமதைக கண்டோன் மகிழ்ந்து. (அஎ)

பஞ்சு மருங்கமர மையற் பிடியென்றே
கொஞ்சி யணைத்த கொடுங்களிற்றை—நெஞ்சுருகிக்
கண்டு பிடியூடக் காத லுடனணையும்
பண்டைமலை நீத்தான் பல. (அஅ)

கந்தமல ருந்தளிருங் காயுங் கனியுமவிர்
மந்திகளுந் தோரா மரவகைகள்—சந்தமுந்
துன்னிடவே பானுகரந் தோன்றிடாப் பல்வனங்கள்
பின்னிடவே போந்தான் பெயர்ந்து. (அகூ)

வாச மலர்சூடி வாய்ந்த மணிபூண்டு
வீசு கமழ்சாந்தம் மேலணிந்து—நேசமுடன்
காந்த னிடஞ்செல்லுங் காதலியின் மேவுபல
சாந்த நதிகடந்தான் றான். (கூ0)

அருவத்தார் சிற்றிடையா ரங்கட் படையைப்
புருவத்தார் வில்லினிடைப் பூட்டி—யுருவத்தார்
காளையர்க ளோடு கடும்போர் புரிநகரம்
மீளி பலவகன்றான் மீண்டு. (கூக)

ஏனை வழியெல்லா மெங்ஙன் கடப்பதெனத்
தானே நினைந்து தயங்குங்கால்—வேனி
லெழுநா வெனவெழுந்து வந்ததே யெங்குந்
தொழுநாமத் தூயோனைச் சூழ்ந்து. (கூ௨)

மண்ணு மறலும் வளியுங் கதிரவன்றன்
கண்ணு மவன்கரமுங் கற்பகஞ்சார்—விண்ணுங்
கொதித்திடவே மேவியதக் கொல்வேனிற் கூமேற்
பதித்திடவு மாமோ பதம். (கூ௩)

நம்பகையை நீர்கொண்டே நான்மறையோர் வென்றிடுவ
ரம்புனலைக் கொண்டிருப்பி னையமற—வெம்பகையு
மேவா தெனத்தெளிந்து வெள்ளமெலாங் கொண்டனனாற்
பாவார் கதிர்க்கரத்தாற் பானு. (கூ௪)

வாங்கு கடலினிடை வாய்ந்த வடவைதனை
யோங்கு கடல்சுவற்ற வுற்றதென—லாங்கதுபோய்
நெஞ்சம் பதைத்து நெடுவேனிற் காற்றும
லஞ்சி யொளித்ததே யாம். (௬௫)

இத்தகைய வெப்பி லிரும்பசியால் வாடியுமீப்
பைத்ததரு நீழற் பதிந்திருந்துந்—தத்துபுன
லாடியுமே காணாது நாவுலர்ந்தும் நத்தனையே
பாடியுமே செல்வான் பரிந்து. (௬௬)

பார்ப்பான் படுந்துயரம் பார்க்கப் படாதென்றே
தேர்ப்பரிமீ தூருந் திகழ்கதிரோன்—போர்ப்பவிருள்
பூமுழுதும் பூங்கமலப் போதடங்கப் போயினனால்
வேய்முழுது மோங்குகுட வெற்பு. (௬௭)

வெய்யோ னகல விழுமியோன் கங்குலிடைப்
பையவே சென்றுவழி பார்க்குங்கா—லையகோ
கானவேன் முட்டைத்துக் காலூன்ற வேலாது
மோனமே வீழ்ந்தான் முனி. (௬௮)

மெல்ல வெழுந்தும் மெதுவா யடிவைத்து
மல்லி னடந்து மலமருங்கால்—வல்லையொரு
கோயி லெதிர்கண்டான் கோபாலற் கேநெஞ்சங்
கோயிலா வீந்ததவக் குன்று. (௬௯)

இன்றிரா விங்ங னிருந்து கழிப்பதென
முன்றி றனிற்படுத்தான மூதறிவோன்—பொன்றலிலா
நெஞ்சம் புழுங்க நினைப்பா னிவையெல்லாந்
துஞ்சலுமே கண்ணிற் றொலைந்து. (௭00)

தனியே நனியுணர்ந்துஞ் சற்குருவின் சொல்லை
முனிவின்றிக் கேட்டு முயல—வினிமையே
யென்று மயலார்சொல் லேற்றோன் றனுற்றிடுதல்
வன்றுனியே யாகுமா மற்று. (௧0௧)

இதுவறிந்து மில்லா ளியம்பியசொற் கேட்டுக்
கதுமெனப்பஃ றூரங் கடந்தேன்—முதுவெயிலில்
வாடி யுடன்மெலிந்தேன் வண்டுவரை கேட்கினும்
நீடு வழியென்பார் நேர்ந்து. (௧0௨)

மற்றை வழிகடக்க மாட்டா தொருவிதத்தி
லுற்றிடினும் நீப்பதெவ னேங்குகடல்—பொற்றவது
வாய்ந்திடினும் மானகரின் மற்றென்னை யார்மதிப்பா
ராய்ந்திடலு மில்லையிவை யான். (௧0௩)

மன்னர் முடியிடறும் மாயோன் றிருக்கோயி
லென்னவித மாயடைவே னெய்துறினுந்—தன்னனோர்
சூழ விருந்தொளிருந் தூயோன் மலரடியைத்
தாழப் பெறுவனோ தான். (௧0௪)

கற்பகத்தைச்சார்ந்திருந்துங் காஞ்சிரத்தைவேட்டிடல்போற்
பொற்பகத்தானெம்மான்பாற்போந்தடைந்து--மற்பமுறுஞ்
செல்வந் தனைவிரும்பல் சீர்மையோ வென்றுணர்ந்து
பல்வருத்த முற்றான் பதைத்து. (௧0௫)

என்ன துயருறினு மிவ்வளவு வந்தமையான்
முன்ன முரைத்தபடி முன்றுவரை—நன்னகர்க்குப்
போய்மீளவுன்னிவழி போகத் தலைப்பட்டான்
றாய்மீளச் சாரா தவன். (௧0௬)

தண்டுவரை மார்க்கமது தானறியா தேங்குமவற்
கொண்டுவரை மார்க்கங் குறிப்பான்போன்—மண்டுமரி
போதலரப் புண்ணியர்கள் போற்றிசைப்பப் பொற்கரத்தைக்
காதலுட னீட்டினனக் கால். (கOஎ)

வெய்யோன் வழிவழியே மெய்யுணர்ந்தோன் றானேகிப்
பையவே சென்றடைந்தான் பன்னாளின்—மெய்யமர்ந்தோர்
சீர்பயின்மாப் பூமுழுதுந் தேக்கிடுவா னன்னலங்கள்
கார்பயின்மே லாழிக் கரை. (கOஅ)

சங்கந் தணிவாய்ந்து சால வுயிரேம்பித்
துங்கமீ னும்மையுருத் தோணறிலங்கிப்—பங்கமிலா
மாலி னிறங்காட்டி யாணிகர்க்கும் வாங்குகடன்
மாலி னெழிற்பொன்னும் வாய்ந்து. (கOகூ)

வாங்கு கடன்மீன மற்றும் மருவிடலால்
வீங்கு புலவகற்றி வீசுபணர்—தாங்குங்
களைகணான் குற்றங் கரப்பார்போ லென்றுந்
தழைகணோர் பூத்தசெய் தல். (ககO)

கட்பகையர் மென்றே கருதியுயிர் கொல்வார்போற்
பட்பகையா ரில்லாப் பரத்தியர்க—ளுட்பகையால்
வாரிமீன் போழ்ந்து மறுகு தொறும்விற்பார்
நேரின்மீ தோகைகொள நெஞ்சு. (கக்க)

மீனம் விலைகொள்வான் மேவு மிளமைந்தர்
வானவி னெற்றி வலைச்சியர்கண்—மீனம்பாய்ந்
தன்னா ருரைகடவா தாங்கரும்பொன் னீந்தேகுங்
கொன்னார் கொடுத்தவையே கொண்டு. (ககஉ)

மருங்கில் வலைச்சியர்கண் மாமறுகு தோறும்
நெருங்கிவிலை விற்கும் நெடுநா—ளொருங்குலர்ந்த
மீனாற்றம் போக்குமவர் விண்முகிலேய் கூந்தலணி
பூநாற்றத் தேன்றாழும் பூ. (கக௩)

இவ்வகைய சீரை யிருகண்ணாற் கண்டுநனி
செவ்விய நெஞ்சுவகை சேர்ந்திருந்தா—னௌவியஞ்
செற்றோ னிருந்தான் சிறிதே யிவைநினைந்தான்
பொற்றேன் மலர்ப்புன்னை போந்து. (கக௪)

வங்கமுகைப் பார்க்கீய மாகாணிப் பொன்னுமிலே
னங்கவர்கே ளாதுய்ப்ப வந்தமிலேன்—செங்கமலக்
கண்ணன் கழலிணையே காணவந்தே னென்றாலு
மெண்ணங் கொளாருண்மை யென்று. (கக௫)

என்செய்வே னின்சொல் லியம்பி யிரப்பலெனப்
பொன்செய்த பூப்புன்னை போந்தகன்று—வன்செய்த
மாலுமிக்குக் கூறி மனமகிழ்ந்தங் கேகினான்
காலுமிக வாலுங் கலர். (கக௬)

பாம்பணைசேர் பெம்மான்றன் பாத மலர்போற்றி
கூம்பணையுஞ் சோங்கதுவுங் கூவடைய—மேம்படுதண்
சாகரமே தாண்டித் தரையடைந்தான் றன்றுபவ
சாகரமே தாண்டினான் றான். (கக௭)

## முதலாவது அவந்திகாண்ட முற்றிற்று.

ஆகச் செய்யுள் (கஉ சு.)

—o—

ஸ்ரீ

இரண்டாவது

# துவரை காண்டம்.

---

## தெய்வ வணக்கம்.

*செங்கரமே கூப்பினனி தேர்வார் வினையிருட்குச்
செங்கதிரோ னென்பர் சிறப்புற்றோர்—தங்குபுக
ழூன்ப ரழைப்பமுன மாதரவிற் சென்றருண்மா
வின்பத் திருத்தா ளிணை.*

## நூல்.

*பாசத் தளைநீத்துப் பாவக் கடல்கடந்து
நேசக் கலனேறி நீண்முத்தித்—தேசினர்போற்
காணும் மலையுங் கடலுங் கடந்தமுனி
மானகரைக் கண்டான் மகிழ்ந்து.* (௧)

*வேத முதித்தவிடம் மேலோ ருறையுமிடம்
நாதங் கதித்தவிடம் நல்லோர்க்கே—போதந்
தெருளுமிட மன்பரகத் தேவா லயஞ்சூழ்ந்
தருளுமிட மத்துவரை யாம்.* (௨)

*அறன்முதலா நான்கினையு மாங்காங் கருளி
மறன்முதலா வேனையவும் மாற்றுந்—திறனுறவே
நம்பினா ருள்ளத்தே ஞானவடி வாய்மிளிருந்
தம்பிரான் வாழ்துவரை தான்.* (௩)

*இருவினையொப் பாக விருந்தவர்பால் ஞான
வுருவினனி யோங்கு முயர்மா—றிருவடிகள்
தோய்வான் றவஞ்செய்த தொல்பதியாந் தண்டுவரைக்
கேய்வான் பதியுளதோ விங்கு.* (௪)

முத்திக்கு வித்தென்கோ மூவா முழுஞான
சித்திக்கு வாய்ந்த திறனென்கோ—பத்திக்குச்
சான்ற பயனென்கோ சாரு மெவரையுமே
தான்றாணாய்ச் செய்துவரை தான். (௫)

தற்போதந் தோன்றாத் தலந்தனிலே தோன்றுகின்ற
சிற்போத மாயொளிருஞ் சீர்க்கண்ணன்—அற்போதம்
நீக்கி யருளளிப்பா னோர்ந்த துவரைதனைத்
தூக்கி னதற்கதுவே சொல். (௬)

இன்னநகர்க் காண்டலுமே யோர்முகிலேய் வண்ணனைநேர்
துன்னலுறக் கண்டவன்போற் சூழ்சுகத்தாற்—பொன்னக
புன்மையென வேபுளகம் போர்ப்ப நடந்தனனு [ரும்]
னன்மை நினைக்கும் நலன். (௭)

செந்தமிழ்தேர் நாவலர்செய் தீங்கவியின் சீரணியு
மந்தமிலாப் பல்பொருளு மாங்கெனிவுஞ்—சந்ததமும்
வேழங்கண் டஞ்ச விளங்கியதே யுன்னுதொறு
மாழங்கொண் டோங்கு மகழ். (௮)

அன்று திருமா லகில மளந்தநா
ணின்று வளர்ந்ததுபோ னீணிலத்தின்—மன்றக்
கிளர்ந்தனவே மாமதில்கள் கேட்டவுட னுள்ளந்
தளர்ந்திடுமா றென்னலருந் தாம். (௯)

இருந்தனந்தாம் பெற்று மெளியவரா யென்று
மருந்தனந்தான் கொள்வா னறிந்து—பெருந்தினமு
மாவிமுதன் மூன்று மழிக்குங் கணிகையர்தா
மேவிவாழ் வீதிபல வே. (௧0)

மூன்று வருணத்தார் முன்னும் பணிக்கெல்லா
மூன்றுமொரு கோலா யுரைப்பதன்மு—னேன்றுடனே
யன்னூர் கருத்தையறிந் தாற்றிடுபின் னோர்வாழுந்
தென்னூர் தெருவிளங்குந் தே. (கக)

மாணிக்கக் காணிழுஃஷி வைர வடம்பூட்டி
யாணிப்பொற் றொட்டிலிலே யாட்டுவித்துப்—பேணித்தம்
பொற்பதுமை கண்வளரப் போற்றிடுநல் வைசியர்தம்
விற்பெரிய வீதிபல வே. (கஉ)

அஞ்சாத நெஞ்சு மழியாத செல்வமுட
னெஞ்சாத கீர்த்தியு மெவ்வுலகு—மிஞ்சாத
வீரமுடன் வெற்றிமகண் மேவ விளங்கிடுமே
தீரமுபார் வேந்தர் தெரு. (கங)

முத்தீ வகுக்கு முதுமறையின் மேம்பொருளை
யெத்தே வருமுணர வேத்திசைத்து—முத்தீனுங்
கன்னன் மொழியுரைக்குங் காசவித்தோர் தம்மறுகு
பொன்னவிர வோங்கும் பொலிந்து. (கச)

அகழும் மதிலு மளவிற் றெருவுந்
திகழுந் துவரைநகர்ச் சீரைப்—புகழு
மிமையவர்தாங் காண்பா னிருந்தவத்தா லென்று
மிமையாக்கண் பெற்றா ரிசைந்து. (கரு)

தெருவி னெழில்கண்டு சிந்திப்பான் சற்றே
குருவி னுதித்தகுணக் கோமான்—மருவுந்
திருக்கோயிற் சேர்ந்திடுவான் சென்றனனு லென்று
மிருக்கோது நாவா னிசைந்து. (கசு)

மின்னார் மதிவதன மீதுநனி பூத்தொளிரும்
பொன்னார் குவளையிடைப் போயினான்—சொன்னாருங்
கண்ணன் றிருக்கோயிற் கண்டான் கரமுகிழ்த்தான்
பண்ணின்ற வாயான் பரிந்து. (கஎ)

ஏந்தெழிற்சீர் தண்டுவரை யென்ற மதாணியதாம்
வாய்ந்தபல வீதி வனமணியாங்—காந்துமொளி
விட்டிலகு நாப்பண் விளங்குந் தனிமணியா
மிட்டமெலா மீந்தருள்வோ னில். (கஅ)

மாமதிலே நற்றூணும் வானகமே பந்தராந்
தூமதிய மீனே சுடர்விளக்காந்—தோமிற்
சதிபதியார் பீடப்போற் சாலப் பொலியு
மதிபதியோ னோங்கு மகம். (ககூ)

கோயின் முனங்குறுகக் கூசினான் மீண்டும்பொன்
வாயினிடை வந்தடைந்தான் மாமறையோன்—சேயின்
குணமெல்லாங் கொண்ட குசேலமுனி வேந்தர்
கணமெல்லாங் காத்திருத்தல் கண்டு. (உ0)

கைதலைமே லேறக் கழியுடல மேனைந்தும்
நைதலிலா நன்மனத்தோ னண்ணினான்—பொய்தலிலா
சீர்துவார பாலர் சிறந்தோங்கும் பொன்வாயி
றோர்துவாரக் கந்தையோன் றேர்ந்து. (உக)

வாயில்காப் பாளரை மகிழ்தூங்க வேகண்டிக்
கோயிறனைக் காக்குங் குணமுடையீர்—தாயின்
மணமுடையீர் கேட்டிரென வாய்மலர்ந்தான் கண்ணன்
றனமுடையீ ரென்றிசைத்துத் தான். (உஉ)

கண்ணனைநோ் கண்ட களிப்படைந்தேன் காசினியோர்
நண்ணரிய வின்பம் நனியடைந்தேன்—கண்ணனைக்கும்
பைந்துளவத் தோனைப் பரவிசா ரூபமதை
யந்தமுற நீரடைந்த தால். (உங)

எளியேன் மறையோ ரினத்துதித்தே னென்பேர்
விளிவார் குசேலனென மேலோ—ரளியே
சுரக்குறுங் கோனுடனே தொன்மறைகள் கற்றேன்
பரக்குபுகழ்ச் சாந்திபன் பால். (உச)

நெடுநா ணனியலைந்து நீளுவரி நீந்திப்
படநாகச் சேக்கைப் பரமன்—றொடுகழலைக்
காண வினைந்தேன் கருத்தறிவீ ரென்றுரைத்தான்
மாணக் குலமறை யோர் மன். (உரு)

குன்றெடுத்துக் காத்தருளுங் கோமா னிடங்குறுகிச்
சென்றடுத் தென்னையவண் சேர்த்திடுத—வன்றெடுத்த
காயப் பெருமையினீர் கைதவமில் புண்ணியமாம்
நேயத் துடனென்று னின்று. (உசு)

இன்னசொற் கேட்ட வெழில்வாயில் காப்பவரு
ணன்னர்நெஞ் சில்லா நவையுடையோர்—பன்னருஞ்சொற்
றாற்றினர் நால்வேதத் தூமுனியி னற்செவியி
லேற்றின ரந்தோ வெடுத்து. (உஎ)

பல்லுலகம் போற்றுகின்ற பைந்துளவ மாலெங்கே
யல்லலுறும் நீயெங்கே யாய்ந்திலைசொல்—சொல்லுங்காற்
கொல்லுங் களிறுங் கொசுவும் நனிபொருந்து
மெல்லுமொரு மின்மினியு மே. (உஅ)

வில்லேந்து பூணும் விதவிதமா வூர்திகளு
மல்லேந்து காவலரு மாநிதியுஞ்—சொல்லேந்து
கோதிலாக் கையுறையுங் கோலமுமே வேண்டுமோ
லாதியான் பால்போ மவர்க்கு. (உ௯)

சீருடனே சென்றாற் றிசைபரவு நன்முகம
னேருடனே யேத்துமே யெவ்வுலகுந்—தேருடனே
மற்றின்றேல் வாராத வன்றுயரம் வாய்ந்திடுமே
சற்றேனு மாய்ந்திலையே தான். (௩0)

னென்னலுண்ட பாகம் நிகழ்த்தவின்றி யாமறந்தா
லின்னலுண்ட வுன்னட்பை யெவ்விதந்தான்—மன்னனவன்
றன்னினைவி லோர்ந்திடுவான் றையலமர் கந்தையோ
யுன்னிலையே யிப்போ துணர். (௩௧)

செல்வ ரதுநட்பே செல்வ ரிடத்தமையு
மல்லவர்தந் நட்போ வமையாது—தொல்லுலகின்
மன்னர் பலர்போற்றும் மாமகள்சேர் கண்ணனிடத்
துன்னட்போ செல்லு முறை. (௩உ)

தந்தைதாய் மக்க டமரிவரென் றுன்னுமல்
வந்து சமரில் வதைக்கின்ற—சந்தமனர்
நட்பென்னும் நல்லறிவை நன்குணரா தூப்படைந்தாய்
திட்பமுட னிவ்வுண்மை தேர். (௩௩)

கல்விபயி லாதனைக் கண்டறியா ரேனுமிகச்
செல்வமுடை யாரே சிறந்திடுவார்—கல்விமிகத்
தேர்ந்தாரே யாளலுந் தீமிடிய ராமசிற்
சார்ந்திடார் வேந்தன் சபை. (௩௪)

ஓதியநா ணட்பென் றுரைத்தனையே யந்நட்பு
யாதிருந்தாற் சென்றபல வாண்டிற்குட்—போதியென
வுன்னை யழைத்திடலா மும்பர்கோன் மோனந்தா
னென்னையோ தேரே மியம்பு. (௩௫)

அந்நா டனுக்கேற்ப வாய்ந்தனன்போ லுன்னட்பை
யிந்நாடே வேந்திரனு மெய்தரிதான்—முன்னாளு
னன்பதனைக் கொண்டேகே லாயிலென்றும் மன்னரெலா
மன்பரலர் யார்க்கு மறி. (௩௬)

அன்றுமிக நட்பென்றே யற்றமது நோக்காம
லின்றுநீ சென்றா லிமைப்பொழுதில்—வன்றுயர
மார்ந்திடுவாய் நெய்யா ரவிர்சுடரை முத்தமிடிற்
சார்ந்திடுமோ தண்ணீர்மை தான். (௩௭)

கோதிலா வுங்குலத்தோர் கொள்ளுந் தொழிலின்றித்
தீதிலாப் போர்நினைவு தேர்ந்துவந்து—சூதிலாய்
காதம் நடந்திளைத்தாய் காயமதி கண்டேங்கும்
போதமிலாப் பைங்குழலி போன்று. (௩௮)

நிதியா ளளகை நிருபனும் நீள்வான்
பதியா ரரசனும் பல்லோர்—துதியார்ந்த
கண்ணனையே காணவிவண் காத்திருத்தல் காணாயே
மண்ணமர்பன் மன்னருமே வந்து. (௩௯)

மேதி குளங்குழப்ப வெள்வாளை வான்றெங்கின்
மோதிக் கனியுதிர்த்த மொய்நீராற்—றீதி
லருளீர நெல்வளர்க்கு மஞ்சோழ நாட
னிருளீரும் பூணா னிவன். (௪௦)

சாரன் முகம்படியத் தண்ணீ ருடல்படியத்
தோரற் றமிழுஞ் செவிபடியக்—காரவிருங்
கண்ட னமர்ந்தருளுங் காசினன் னுடணிவன்
வண்டமிழ்தேர் பாண்டிவள மன். (௪௧)

ஏதிலா ராவிதனை யேற்றொளிரும் வாளேந்திப்
பேதிலா விற்குமிப் பேர்வள்ளல்—கோதிலாய்
மேக மலையமர வேகளிறென் றேங்குபிடி
தேகந் தளர்சேரன் சேய். (௪௨)

வாங்குசிலை தாங்கும் வரைமருளிவ் வன்றோளான்
மாங்குயில்கள் பாட மயிலினங்கள்—பாங்காய்
நடன மதுசெய்ய நன்மந்தி யார்க்குங்
குடகுநா டாளுகின்ற கோ. (௪௩)

காளையர்கள் சூழுங் களிறேறு போன்றவிவன்
வாளையது பாய வலம்புரிதான்—பாளையமர்
வான்கமுகே யீன்றதென வாய்த்திடவே தான்மிளிருந்
தேன்கமழ்தார் சீர்க்கலிங்கன் சேய். (௪௪)

தீங்குயிலேய் மென்மொழியார் செண்டாட நோக்கியிரு
மாங்கனியைத் தாம்பறித்து மந்தியினை—மோங்குவகை
கொண்டாடும் பாஞ்சாலக் கோனிவனுந் தேன்சொரிய
வண்டாடுந் தாரணிந்த மன். (௪௫)

சேனை புடைசூழச் சேர்ந்தொளிர்வே லிவ்வழகன்
யானைமருப் பீன்ற வயிர்முத்த—மீனைப்போ
லெங்கும் பரந்திடலா லேர்வானென் றையுறுத்தும்
வங்கநா டாளுகின்ற மன். (௪௬)

செந்தா மரையன்னஞ் செய்நடனந் தான்கண்டே
யிந்தாவென் றம்பொன்னை யீவார்போற்—பைந்தாதைப்
புன்னை மலர்சொரியும் பூம்பொழின்ம ராடமனன்
மின்னையுமிழ் வேலமரிவ் வேந்து. (௪௭)

மென்காற் சிறையன்ன மென்னடையு மெல்லிழையின்
றன்காற் றனிநடையுந் தான்கண்டு—பொன்காவிற்
பூந்தா மரைசிரிப்பப் பூங்குவளை கண்காட்டுந்
தேந்தா ரிவன்மச்சன் சேய் (௪௮)

ஆலை யமர்கருப் பஞ்சாறு தான்பாயுஞ்
சோலையிலே மேதி சுகித்துண்டு—பாலைக்
கடைவார் தமக்களிக்குங் காந்தார வேந்த
னிடைவா யிலங்கு மிவன். (௪௯)

இவ்வேந்தர் தம்மு ளெவர்க்குநீ யொத்திடுவாய்
தெவ்வேந்த ருந்தாழுந் தேவனையே—யிவ்வளவிற்
காண்பா னினைத்திடுதல் கான்முடவன் கோற்றேனை
வீண்பார்த் திடன்மானு மே. (௫௦)

இத்தலைவாய் நிற்கு மிவர்க்கெலா மேவலர்கண்
மெத்தவுளர் மாநிதிபு மேயுண்டா—லெத்தனைநாட்
காத்தாலுங் குற்றமிலை காசில்லா வுன்றனுக்கோ
வேத்தவையில் வேலையென்னோ வின். (௫௧)

ஆதலினா லைய வறிந்துநின் னூர்திரும்பிப்
போதலே நன்மையெனப் புல்லறிவோ—ரோதலுமே
யென்று மெழிற்குணங்க ளோந்துங் குசேலமுனி
கன்றிவை யாய்வான் கனுழ்ந்து. (௫௨)

மின்னவிரும் பூணும் விளங்குகின்ற மாநிதியும்
பொன்னவிரு மூர்த்தியுமிப் போதெங்கே—யின்னலுறும்
நாமடைவோ மூதாதை நாளினுமே கண்டதிலை
யாமிதற்கென் செய்வா மினி. (௫௩)

கந்தையிலார் கையுறையைக் காண்பாரேல் கைகொட்டிச்
சிந்தை மகிழச் சிரிப்பரென—வந்தவத்தோ
னெண்ணி யிருப்பவவ் வில்காப்பார் பாலுரைப்பார்
திண்ணியமெய்ஞ் ஞானச் சிலர். (௫௪)

யாரென் றறிந்தீ ரருந்தவமா ராரியனைப்
பேரென் றெனக்கருதிப் பேணுமை—நேரன்று
வாய்மை பொறையொழுக்க மாதவமெய்ஞ் ஞானமுடன்
றூய்மையெலாம் வாய்ந்த சுகன். (௫௫)

மாந்தர் பிறப்பெய்த மாதவமே வேண்டுமெனச்
சாந்த மறைதேர்ந்து சாற்றிடலான்—மாந்தருக்குண் [வோ
மேன்மறையோ ராய்த்தோன்ற மெய்த்தவந்தா னெவ்வள
தான்முறையே செய்திருப்பர் தாம். (௫௬)

அந்தணரே மூவருக்கு மாசிரிய ராந்தெய்வ
மந்தணரே யைந்தொழிலு மாற்றவலா—ரந்தணரே
தெய்வமெனக் கென்றுகண்ணன் செப்பிடவும் யாமயிர்த்தா
லுய்வதெவ னம்மா வுரை. (௫௭)

இம்மையிலே யந்தணருக் கேன்றவகை தான்புரிந்தாற்
செம்மையிலே தானடைவர் சீரெல்லா—மம்மையிலே
வானுலகப் போகமதும் வாய்ந்ததற்பி னுண்டிடுவார்
தேனுலவு மீசனடித் தேன். (௫௮)

இத்தகைய வந்தணரை யேழையரென் றுன்னலெவ
னத்தகையர் போற்று மமுதனிவன்— சித்தமதைத்
தானடக்கித் தத்துவத்தின் சான்றபொரு டேர்ஞானம்
மேனடக்க வாய்வான் விரைந்து. (ருகூ)

முத்த ரிலக்கணந்தான் முற்று முணராது
சித்த மிசைந்தபடி செப்பிடுதே—றத்தம்
மடமை தனைவிளக்கும் மாதவமா ரன்னோர்
திடமதனைக் கேண்மின் றெளிந்து. (சு0)

உலகந் தனைவெறுத்தே யோங்கிடுமெய்ஞ் ஞானம்
விலகா நெறியே விளங்குந்—னுலகபற்றோர்க்
கெம்மாலு மும்மாலும் யாராலு மெவ்வேந்தர்
தம்மாலு மாம்பயனென் றுன். (சுக)

வேதமது பொய்த்தாலும் வேலை கரையிழந்து
பூதலமே குன்றநிலை போந்தாலும்—போதமுறு
மந்நிலைதா னீங்கா தவைகண்டு புன்சிரிப்பார்
தந்நிலையே யோம்புமவர் தாம். (சுஉ)

இன்பமதைச் செய்தாலு மேழையரென் றெண்ணில்லாத்
துன்பமதைச் செய்தாலுந் தூய்மையோ—ரின்பதுன்ப
மின்றிச் சுகநிலையி லெஞ்ஞான்று முற்றிடுவா
ரன்றியவை யாயா ரகம். (சுங)

கற்பகத்தை யிங்கழைத்தற் காயமதிற் றுஞ்செல்லன்
முற்பகலைப் பிற்பகலா முற்றுவித்த—லற்பமெனச்
சித்திகளைத் தாம்வேண்டார் செப்பு முயர்சீவன்
முத்திதனைப் பெற்றமுதல் வோர். (சுச)

ஆடுவா ரங்கைகொட்டி யார்த்திடுவா ரன்போடு
பாடுவா ருள்ளம் பதித்திடுவா—ரோடுவா
ருன்மத்தர் போற்றிரிவா ரோங்கி நகைத்திடுவார்
சென்மத்தைச் செற்றோர் தெளிந்து. (௬௫)

கந்தை யுடுப்பார் கருதரிய மோனநிலை
சிந்தை யடங்கவே சேர்ந்திடுவார்—முந்தை
மறைமொழியுந் தன்மயமே வாய்ந்திடுவா ரென்றுங்
குறைமொழியா நல்லோர் குறித்து. (௬௬)

தன்னை யறியுந் தனிஞானத் தாலென்றுந்
தன்னைத்தா னோக்குந் தவமுடையோர்—பொன்னுலகிற்
பூமரைதண் ணீரின் புளியம் பழத்தோடின்
றேமறவே தோன்றிடுவர் தோய்ந்து. (௬௭)

இன்னோர் பெருமை யெளிதி னிசைக்குவதோ
முன்னோருந் தேர்ந்து மொழிவரிதா—லென்னனையா
ரெங்ஙன் மொழிகுவதே யெம்மா னருணீண்ட
விங்ங னுரைத்தே மிசைந்து. (௬௮)

இம்மா மறையோ னெழில்ஞானி யாயினுமே
யம்மா கரும மகன்றிலனால்—சும்மா
விருக்குஞ் சுகம்பெற்றா னெஞ்ஞான்றும் ஞானத்
திருக்குமிக வோங்கத் தெளிந்து. (௬௯)

ஆதிநா ணட்பென் றறைந்தானம் மால்காண்பா
னோதினா னன்றி யொருபொருளும்—நீதியான்
பால்விரும்பிப் போந்திலனாற் பற்றெல்லா மற்றிடவே
மேல்விரும்பித் தேர்மறையோர் வேந்து. (௭௦)

ஆவாவிவ் வந்தணனை யன்புடனே காண்டொறுமே
நாவாரப் பாட நசைகொள்ளு—மோவாது
மெய்யிற் புளகமெழும் மேவிப்போய்க் கண்ணன்பான்
மையிலிவன் சீர்வழுத்து வாம். (எக)

வன்றிணிய நெஞ்சுடையார் வாயடங்க முத்தரது
குன்றனைய சீரதனைக் கூறியபி—னன்றுடைய
மாதவமே பூண்டொழுகு மாமறையோன் பானுரைப்பார்
யாதவனில் காப்பார்றிசைந்து. (எஉ)

மறையெல்லா மோர்ந்துநனி வன்பிணிவெம் பாசச்
சிறையெல்லாஞ் செற்றொளிருந் தேவே—குறையெல்லாந்
தீர்ந்தேங் களிக்கடலைத் தேக்கினே மின்பமெலா
மார்ந்தே முனதுவர வால். (எ௩)

கங்கைமுத னீராடிக் காசினிநற் கேத்திரத்திற்
பொங்குமா தானம் புரிபயன்றான்—சங்கைத்
துரிசறவே தான்கிடைக்குந் தூமறையோ யுன்றன்
றரிசனமே காண்போர் தமக்கு. (எச)

சிறியோர் மடமையாற் செய்தபிழை தன்னைக்
குறியேல் திருவுளத்திற் கொண்டே—யறிவோ
யகழ்வாரைத் தாங்கு நிலம்போலத் தம்மை
யிகழ்வார்ப் பொறுத்த றலை. (எரு)

சற்றே யிவணிருக்கிற் சார்ந்தியாங் கண்ணனிடம
நற்றே மறைதேருன் னல்வரவைச்—சொற்றே
கடிதின் வருவமெனக் காசில்லாற் போற்றிச்
சடிதி யிதுபுகன்றார் தாழ்ந்து. (எசு)

இதுவரையுந் தாழ்த்த வெமதுபிழை கொள்ளேன்
முதுமறையோ யென்றே மொழிந்து—கதுமெனவே
சென்றார் திருமால் செவிமடுப்பான் செய்தவத்தின்
குன்றான் விடைபெற்றுக் கொண்டு. (எஎ)

செம்பொ னெழுபத் திரண்டுவா யில்தாண்டி
யம்பொன் முடிமன்ன ராரவைபோய்—தம்பிராற்
காணா ரவணமருங் காவலரைத் தாங்கேட்டார்
சேணு டளித்திடுமால் சேர்வு. (எஅ)

பொன்னு ருவளகத்தே போயினு ரெம்பெருமான்
மின்னார் பலர்சூழ வேயென்று—ரன்னோர்சொற்
கேட்ட வுடனே கிளிமொழியார் காக்குமிட
மோட்டம் பிடித்தா ருவந்து. (எகூ)

திங்களொடு மேன்மை திகழ்சங்கந் தான்வாய்ந்து
பொங்கு மமுதம் பொலிவுற்று—மங்கலிலாப்
பொன்னும் விளங்கப் பொருந்திடுமே பாற்கடல்போன்
மன்னு முவளகத்தின் மாண்பு. (அ௦)

சாலவுமே மெய்முழுதுஞ் சார்ந்த பழியுடையோன்
பாலமர்தல் பாவமெனப் பாவித்துக்—கோலஞ்சேர்
சீருவள கஞ்சூழச் சேர்ந்தனபோற் றோன்றியவே
காருவக்கும் பஞ்சதருக் கள். (அக)

இன்ன வெழில்வாய்ந்த வேறுவள கத்திலொரு
சொன்னமலர் மஞ்சத்தே தோன்றினன்—பொன்னவிரும்
பொன்னு டலையமரப் பூஞ்சத் தியபாமை
மின்னாள் பதமமர வே. (அஉ)

அந்தப் புரங்காக்கு மாயிழையார் தம்மிடத்தே
நந்தலிலா வெம்வரவை நாதன்பாற்—சிந்தையுடன்
சொற்றிடுவீ ரென்றுரைத்தார் தொல்லுலகிற் கீர்த்தியெலா
முற்றிடுவா யில்காப்பா ரோர்ந்து. (அங)

காக்குங் கிளைமொழியார் கண்ண னிடங்குறுகி
வாக்கு மலர்த்தேனின் வாய்மலர்ந்தார்—தேக்குறுமால்
கோயிலா நெஞ்சங் கொடுத்துக் குறைதவிர்க்கும்
வாயில்காப் பார்தம் வரவு. (அச)

கேட்டார் திருமால் கிளர்வாயில் காப்பாரை
வாட்டா மரைவாய் வரவுரைத்தார்—தேட்டாத
மென்மொழியார் சொல்லவது மேவினரால் காவலர்கள்
பொன்மொழியா ரந்தப் புரம். (அ௫)

மின்னுகின்ற மீன்களிடை மேவுகின்ற தண்மதிபோற்
றுன்னுகின்ற மாதரிடைத் தோன்றிநனி—மன்னுகின்ற
தோன்றலையே கண்டார் தொழுதா ரெழுந்தார்கை
வான்றலையே நோக்க மலர்ந்து. (அசு)

சிந்தை களிதூங்கச் சீர்மறையாற் றுமேத்தி
முந்துதா னையொடுக்கி முன்னின்றார்—வந்ததிவ
ணென்னென்று னெல்லாந்தே ரெம்மான்று னேனையரு
மன்னனிடஞ் சொல்வார் மகிழ்ந்து. (அஎ)

ஆதிநா ளையகின்னோ டார்ந்தகலை கற்றவனும்
கோதிலா நன்னட்பே கொண்டவனுந்—தீதிலாப்
பண்புடையான் கந்தைகொளும் பார்ப்பான் குசேலனென
மண்பரவு வான்வந்தான் மற்று. (அஅ)

வற்றியெலும் பார்யாக்கை மாதவனின் மேல்வைத்த
பற்றதனை யாமோ பகுத்தறிவோ—மிற்றைநாள்
வந்து திருவாய் வதிகின்றான் மற்றிதுவே
பைந்துளவோ யெம்விண்ணப் பம். (௪௯)

கேட்ட பொழுதே கிளரு முகமலர
வாட்டமிலா நெஞ்ச மகிழ்பூப்பக்—கோட்டமிலா
நற்றவமா ராரியனை நாடி யிவணழைப்பீர்
சற்றேனுந் தாழாமற் றான். (௫0)

கண்ண னுமதியைக் காவலர்க டாமேற்றுத்
திண்ணெனவே சேர்ந்தார் திருவாயி—னண்ணுமவண்
கோதிற் குசேலனடி கும்பிட்டுக் கூறிடுவார்
தீதின் மொழியாற் றெரிந்து. (௫௧)

பிடியினங்கள் சூழப் பிறங்குகளி றேற்றின்
முடியிடையார் சூழத் துலங்கும்—கடிகமழும்
பைந்துளவத் தோன்பாற் பகர்ந்தே மருமறையோய்
சிந்தையுட னீவந்த சீர். (௫௨)

மன்வரவு பார்க்கு மறைமுதலோய் சான்றகுண
னின்வரவு கேட்ட நெடியனவன்—பொன்வரவி
னோகைநனி பூப்ப வுனதுவர வேமதித்தான்
றோகைமொழி யின்பந் துறந்து. (௫௩)

இன்னே யழைத்திடுமி னின்னே யழைத்திடுமி
னின்னே யழைத்திடுமி னென்றுரைத்தான்—முன்னே தன்
றாய்வருகை கேட்ட தனிக்குழவி தான்போன்று
நேயமலர் பூத்திடவே நெஞ்சு. (௫௪)

இலக்கண மேயுள்ளா னிவ்வகையே சொற்ருன்
மலக்குறும் பில்லா மறையோய்—தலக்கணீ
வாரா விடின்கடிதே வள்ள லிவணிமைப்பிற்
சாரா விருந்திடுவன் ருன். (கரு)

ஆதலினு லாரியனே யண்ண லகமகிழ
வேதமின்றிப் போந்தருள்க வென்றங்கைப்—போதகமே
கூப்பினு ரையன் குதூகலித்துச் சென்றனனுல்
காப்பினு ரோடுங் கனிந்து. (கக)

அன்னதுதான் கண்ட வறிவிலா ரெண்செய்தேஞ்
சொன்னவுரை நெஞ்சஞ் சுடுகிறதே—மன்னவன்ருன்
றேர்ந்தானே யாமாகிற் சேராத திங்குண்டோ
வோர்ந்தாரே தங்க ளுளம். (கஎ)

அருள்சேரு மந்தணனே யாதலினு லான்ற
தெருள்சேருந் தேவனிடஞ் செப்பா—னிருள்சேரு
நெஞ்ச ரிதுநினைந்து நின்றே திடம்பொருந்தி
யஞ்சுதலை விட்டா ரறிந்து. (கஅ)

மன்னனையே காணு மகிழ்ச்சிமுன் னீர்த்திடவே
நன்னயமாய்த் தான்பின் னடந்திடலும்—பன்னரிய
பல்வளமும் பார்த்தான் பரவியிடப் பாருலகிற்
சொல்வளமு மில்லையென்ருன் சூழ்ந்து. (கக)

பன்மணிவாய் பின்படவே பார்ப்பான்முன் ருன்போந்து
பொன்மணிவா யந்தப் புரத்தினுக்கு—நன்மணிபோ
லண்மையனுய்ச் சென்றடைந்தா னுங்கமர்பல் லோவியங்க
ளுண்மையிலே கண்ணனென வோர்ந்து. (க00)

நங்கிவனிவ் வாறெய்த வின்னும்வந் தில்லையெனப்
பூங்கதிர்தான் பார்க்கும் பொலன்பூவி—னோங்குமுகிற்
பார்க்கு மயிலின் பசப்பார்க்கும் பைங்கன்றின்
சேர்க்கைமீ தார்ந்தானத் தே. (க0க)

இங்ஙன் றிருமா லிவன்வரவு பார்த்திருப்ப
வங்ங னவனு மகமகிழ்ந்தே—யெங்ஙனுமே
சும்மா விருக்காமற் சூழ்ந்தெவையுங் கண்டுவந்தா
னெம்மா னிருக்கு மிடம். (க0உ)

மிடியோ ருணவிழந்தோர் வெப்புழல்வோர் சூவர்
கடிதினிலே பொன்னமுதங் காவும்—படிபெறுவார்
போன்று குசேலமுனி பொன்னூர் திருமார்பன்
சான்றவுருக் கண்டான் றனித்து. (கOங)

வேத முடிவில் விளங்கும் விழுப்பொருளை
யேதமிலா நன்மணியை யெம்மானை—போத
வுருவானை யுண்மையனை யொப்பில்லா மாலை
யருவானைக் கண்டா னறிந்து. (கOச)

கண்டலுமே பூத் தூவகை கால்விசையாத் தானடந்தா
னீண்டவனுங் கண்ணுற்றே நேயமுடன்—மாண்டபூம்
பள்ளி கடிதகன்று பார்ப்பா னடிபணிந்தான்
கள்ளமிலாக் கண்ணன் கனிந்து. (கOரு)

திலகமண் டோயத் திருவடிதான் போற்றிக்
குலமறையோ னைத்தழுவிக் கொண்டா—னுலகமெலா
மெய்யன்பன் மாமறையோர் வேந்தனெனச் சொல்வாய்மை
பொய்யாமற் காக்கும் பொருட்டு. (கOசு)

இன்றே சுபதினமா மின்றே சுபதினமா
மின்றே சுபதினமா மென்றனுக்கு—நன்றே
யறம்பலித்த வில்லு மடைந்ததுவே வாழ்வும்
மறம்பறந்த நின்வரவான் மற்று (௧௦௭)

இன்னவிதந் தான்புகழ்ந்தே யெம்மான் மறையோனைச்
சொன்னபீ டத்தேற்றித் தூநீராற்—பொன்னவிர
நீராட்டிப் பட்டாடை நேர்பெறவே தானுடுத்திப்
பாராட்டி நின்றான் பரிந்து. (௧௦௮)

ஐய னடிவிளக்கி யந்நீர் சிரமேந்தி
மைய விருணீங்க மாமாயோன்—செய்யபொன்
னாசனமே யேற்றி யருச்சனைதான் செய்துவந்தான்
போசனமே யூட்டப் புக. (௧௦௯)

தும்பை மலரனமே தூவெள்ளி மால்வரையாச்
செம்பொற் பருப்பே சிகரமா—வம்புனலா
நெய்யே கருணை நெடுங்குன்றாத் தான்படைத்தான்
செய்யசிற் றுண்டிபல சேர்த்து. (௧௧௦)

சொல்லமுத மூடே சுவைபெருக்க மால்வண்ண
னல்லமுத மூட்ட நலமுடையோன்—பல்லமுது
முண்டு பசிதீர்ந்தா னும்பருமே நாவூர்ந்தார்
பண்டையமு துண்டும் பரிந்து. (௧௧௧)

விரைசேரு நற்சாந்த மெய்யெல்லாம் பூசி
யுரைசேரு மின்சொல் லுரைத்தே—புரைசேரா
மஞ்சத்தே யேற்றி மகிழ்ந்தளித்தான் பாகடையுங்
குஞ்சத்தாற் கால்வீசிக் கொண்டு. (௧௧௨)

வழிவந் திளைத்தோன் மலரடிநோய் தீரக்
கழிமகிழ வேபிடித்தான் கண்ண—னழிவிலதாம்
பன்முகமன் பண்ணவுமே பாரா தவனாகி
நன்மோனத் தேயிருந்தா னன்கு. (கக௩)

பித்தருன் மத்தர் பிசாசர் குணத்தவரா
நத்தவ ரென்றே நவின்றிடுவர்—சித்தமது
விட்டகலா தையன் விழுவுருவைச் சிந்தித்து
நிட்டையிலே தானிருந்தா னேர். (ககச)

நீருற்ற வுப்பி னெருப்புற்ற மின்னொளியி
னேருற்ற வெமமா னிடங்கலந்து—பேருற்ற
தற்போதந் தானழிவித் தன்னையுமே தான்மறந்தா
னற்போத வந்நிலையி னன்கு. (கக௫)

நாதாந்த வாழ்வே நாடி யிவனிருப்ப
வேதாந்தத் தேயிலகு மெய்க்கண்ணன்—பேதாந்த
மில்லான் வரவறிந்தே யின்புடனே தான்சொல்வான்
சொல்லார் மறையோற் றுதித்து. (கக௬)

குன்றனைய சீராயுன் கோதில் தரிசனத்தா
லென்றனுடல் பூரித்தே னின்புற்றேன்—மன்றலந்தார்
சீர்பெற்ற வேந்தருளுந் தேவருளு மென்பேறு
யார்பெற்றார் யார்பெறுவா ரே. (கக௭)

பூண்டதயை யென்பானீ பூரணமாய் வைத்தருள்வா
யாண்டவனே யென்ற னகமறிவாய்—சேண்டலமே
தான்பெறினு முன்னட்பிற்சான்றதுவோவென் றுரைத்தான்
வான்பெற்றோர் போற்றுகின்ற மால். (கக௮)

முத்தி தனையளிக்கு மோன நிலைசேர்க்கும்
பத்தி மிகப்பெருக்கும் பன்னரிய—சித்தியெலாங்
கூட்டுவிக்கு நீர்சூழ்குவலயத்தே நன்னெறியி
னூட்டுவிக்கு நல்லோர்தம் நட்பு. (கககூ)

நட்பே திரவியமா நட்பே பெரும்பேறு
நட்பே யிருள்சீய்க்கு நற்கதிரா—நட்பே
பவமறுக்குங் கூர்வாளாம் பண்புடையார் நட்பே
தவமளிக்குந் தன்மையதாந் தான். (கஉ0)

நல்லார் குணமுரைப்போர் நாமணக்க வைம்புலன்வாய்ச்
செல்லார்சொற் கேட்போர் செவிமணக்க—நல்லாரைக்
காண்போர்தங் கண்மணக்கக் காதமண வாதோநன்
மாண்போரைப் போற்று மனம். (கஉக)

அன்னோர்தம் நட்பே யருந்தவத்தா லெய்துமென
நன்னூல்க டேர்ந்தே நவின்றிடுமான்—முன்னாளி
லென்னதவஞ் செய்தேனோ வெம்மானே நின்னட்பைப்
பொன்னவிர வெய்தற் பொருட்டு. (கஉஉ)

முன்பு படித்த முதலுன்னை யான்கண்டே
யன்ப நெடுநாட்க ளாயிற்றால்—பின்பு
கலியாணஞ் செய்தனையோ கான்முளைதா னுண்டோ
சலியாமற் றெனக்குச் சாற்று. (கஉா)

எத்தனைபேர் மைந்த ரிசையுடனே தான்பிறந்தா
ரத்தனைபே ருஞ்சுகமோ வாரியனே—முத்தனைய
வன்னவர்க்கு வேதவிதி யாய்ந்தே யுபநயனம்
பின்னமின்றிச் செய்தனையோ பேசு. (கஉச)

கனமதிலே தேர்ந்தாரோ காதலர்க ணல்ல
தினமதிலே சற்குருவைத் தேடி—மனமதிலே
செம்மை பதிந்தனவோ தேமறையி னுண்மையெலா
மெம்மையாள் கோனே யியம்பு. (௧௨௫)

மைந்தர் வருந்தாமன் மற்றவர்க ளெண்ணியவை
சிந்தை களிதூங்கச் செய்கிறயோ—முந்தை
யருந்தவத்தா லன்றி யடைவரோ மக்க
ளிருந்தவத்தா யுண்மை யிது. (௧௨௬)

மாதவமே செய்தாலு மாமறையே தேர்ந்தாலு
மேதமிலா நல்லறமே யென்றாலும்—பூதலத்தோர்
மைந்தரடை யாராகில் வானுலகந் தான்சேரார்
முந்தைமறை சொல்லு மொழி. (௧௨௭)

நாக சுரவோசை நல்வீணை யின்னோசை
பாகின் மொழியனையார் பண்ணோசை—யாகவிவை
யாவு மினிதென்பா ரம்புதல்வ ரின்மழலை
யாவலுடன் கேளாத வர். (௧௨௮)

நானமுதற் சந்திசெப நன்குநடக் கின்றனவோ
மோனமுறச் சிந்தை முயல்கிறதோ—வானவிவை
செய்வா னுடம்பு திடமோ வருண்மழையைப்
பெய்வோய் தெளிந்திடவே பேசு. (௧௨௯)

சீரார்நின் னூர்நின்று சேர்ந்திடுவா யிங்ஙனென
நீரார்நின் றன்மையெலா நேற்றுவரை—யாராய்ந்து
கொண்டிருந்தே னன்புடனே கூடினாய் நற்குணங்கண்
மண்டிருந்த மாதவனே வந்து. (௧௩0)

காத மிருந்தாலுங் காசினியி லன்புடையோர்
பேத மறநினைந்து பேசிடுவா—ரேதமுளோ
ருண்மைக்க ணேர்ந்தாலு மன்பமரயே தானினையா
ருண்மைக்க ணுற்றவுயர் வோய். (௧௩௧)

ஆவி யனையாய்நீ யாருந் திருநாட்டிற்
சோவெனவே மாரி சொரிகிறதோ—சாவியின்றிச்
செந்நெ றழைத்துச் செழிக்கிறதோ மற்றமுந்
தந்நிலையி னிற்கிறதோ தான். (௧௩௨)

முன்னு ளிருவருமே முந்தை மறையெல்லாம்
பொன்னுர்சாந் தீபனிடம் போய்ப்படித்த—பன்னுளுங்
கூச்செல்லாம் போட்டுக் குளிர்சிந்தை யாலுரைத்த
பேச்செல்லாம் ஞாபகமோ பேசு. (௧௩௩)

நங்குரவ னில்லா ணமைப்பார்த்தோர் நாளதனிற்
பொங்க விறகுகொடு போதுமென—மங்குறவழ்
கானில் விறகொடித்துக் காளைவப் போந்தனமே
யானி னியல்பா யமர்ந்து. (௧௩௪)

அப்பொழுது நீரு ரரன்மேனி யேய்க்குமுகி
லப்பு தனைமேய்ந்தே யமபிகையின்—செப்பரிய
பைம்மேனி வாய்ந்து பரந்ததே வான்முழுதுங்
கம்மென திருண்டதே கான். (௧௩௫)

இடித்தொளிவில் லேந்தி யிசையார்ந்த வம்பு
தொடுதொளிரு மின்னேந்தித் துன்னுங்— கடுத்தமரை
யேற்றிடுவான் போல வெழுந்தனவே வெங்கோடை
தோற்றிடுவான் மாமுகில்கள் சூழ்ந்து. (௧௩௬)

இடியே முழவமா வென்றரங்கே கானு
வடியெடுத் தாடு மவரே—வடிவமைந்த
நன்மயிலாக் கண்டுவப்போர் நாமாப் பொலிந்தனமே
தன்மையுளோய் ஞாபகமோ சாற்று. (கஙஎ)

முற்று முணர்ந்த முதியோர்க ணற்கவிதான்
சற்றுந் தடையின்றிச் சாற்றிடல்போல்—கற்றுணர்ந்தோய்
மேன்மேலும் பெய்தனவே வெள்ளம் பெருக்கெடுப்ப
வான்மேனின் றாற்று மழை. (கஙஅ)

கைநனையக் கானனையக கானகமே தானனைய
மெய்நனைய விந்தனமு மேநனையச்—செய்நனையக்
கான்றதே தாரைக் கனமழைதான் பூவிறுதி
போன்றதே யந்தப் பொழுது. (கஙகூ)

ஊற்றுகின்ற மாரி யொழிவின்றிப் பெய்திடவே
யாற்றலினி யென்னென்றே யாய்த்திடுங்கால்—கூற்றெனவே
வந்து சுழன்றதே மாமரங்கள் வீழ்த்திடவே
கந்தடரு மாவசைக்குங் காற்று. (கசo)

மோதுகின்ற காற்றின் முதுமரங்க டாமசைந்தே
யோதுகின்ற சாகை யொலித்திடுதன்—மீது
காமமைத்துப் போதுங் கனமழையே யில்லென்
றாமுரைத்தல் போன்றனவே யுற்று (கசக)

சாற்றும் பலமாவுந் தம்மிற் புகப்பறவை
போற்று குடம்பைப் புகுந்தொளிப்பக்—காற்றுமழைக்
காற்றான்போற் கைக ளவித்துக் கதிரவனுந்
தோற்றான்போற் சென்றான் றனிந்து. (கசஉ)

கலையுணர்ச்சி கேள்வி கழித்தோ ருடனே
புலையுணர்ச்சி யோருளமே போன் று—நிலையுணரும்
வானமகள் கூந்தல் வளர்ந்ததுபோற் றோன்றியதே
யீனமிகு மான விருள். (சசஅ)

குருந்தையடி சேர்ந்து குறுகியுமே கொன்றை
யிருந்தருவிற் றங்கியுமே யெய்த்துப்—பெருந்துயர்தான்
கொண்டு திரிந்தனமே கோதிலா யப்பொழுது
கண்டதெலாம் நெஞ்சுளதோ காண். (சசசு)

மாட்டும் விறகான் மயங்கு நமக்கிரங்கிக்
காட்டு மரமுங் கணீர்விடுமால்—வாட்டமுற
வீரப் பதமே யினித்த சுவைப்பதமாச்
சாரவுறல் ஞாபகமோ சாற்று. (சசு)

இந்தவித நாமயங்கி யேங்குங்காற் றன்குலத்து
மைந்தனவ னண்பனொடு மாவனத்தி—னந்திடவே
செய்யு மிருளைச் சிதைப்பான்போற் றோன்றினனால்
வையமகிழ் தண்கதிரோன் வந்து. (சசக)

காற்றுமழைக் காட்பட்டுக் கானகத்தே காரிருளி
லாற்றலின்றி யெய்த்த வருமைந்தர்—நேற்றைநா
ளென்னுற்றா ரென்றே யெதிர்காண்பான் போலுதித்தான்
மன்னுற்ற செங்கதிரோன் வந்து. (சஎ)

வெய்யோ னுதிப்ப விமலமறைச் சாந்திப
மெய்யோ னமைத்தேடி வெங்கானில்—பையன்மா
ரெங்கடைந்தா ரென்னுற்றா ரென்றிரங்கி வந்திடுங்கா
லங்கவனைக் கண்டிலமோ யாம். (சஅ)

கண்டு நனிவணங்குங் காலைக் கருணையனைத்
தொண்டு புரிவோரிற் றாய்மையரே—பண்டுமறை
கற்ற கடன்கொடுத்தீர் காசறுத்தீ ரென்றனனே
யுற்ற புகழ்படைத்தோ னோர்ந்து. (௧௪௯)

கல்வி தனைப்போலக் காதலியுங் காதலருஞ்
செல்வப் பொருளுந் திகழுவெனப்—பல்விதமா
மாசி யதுகூறி யன்பாய் நமையழைத்துப்
பேசியகம் போயினனே பேர்ந்து. (௧௫0)

இன்னவெலாம் ஞாபகமோ வென்னன்ப வென்றுரைத்தே
யுன்னரிய கைதவனு மோர்மனிதன்—றன்னைப்போ
னன்னர் வினவி நலமறையோ னன்புண்பா
னின்னுமொழிந் திட்டா னிசைந்து. (௧௫௧)

பந்தனைதா னீத்தவனே பற்பலநா ளின்பின்பு
வந்தனையா லென்னகொடு வந்தனைநீ—தந்தனையே
னன்றென்றான் பக்கணத்தி னற்சுவையிற் சிந்தனைதான்
சென்றபெருங் கள்வன் றெரிந்து. (௧௫௨)

இனியவுண வேதேனு மின்றிவரு வாயோ
மனியவுன துள்ளமதை வள்ளால்—நனியற்வேன்
வேண்டு மதனி வெறுமை யனுப்புவளோ
பூண்டபுக ழன்பா புகல். (௧௫௩)

இங்ங னளித்தியென வெம்மா னிருகரங்க
ளங்ஙனமே நீட்ட வருமறையோ—னெங்ஙன்
கொடுத்திடுவா னின்பாலே கொள்வோர்க்குக் காடி
மடுத்திடுவான் போலுமவன் மற்று. (௧௫௪)

பலநாட்கள் கண்ட பழங்கந்தை வாங்கிக்
குலநாரி போற்றுகுணக் குன்று—னலநாற
வாய்ந்து முடிந்த வவற்பொதியைக் கண்டுகொண்டான்
வாய்ந்தபுகழ்க் கண்ணன் மகிழ்ந்து. (கருரு)

அன்பிற் கிடைத்த வவற்பொதியைத் தானவிழ்த்தே
யின்பினிரு கண்ணோக்கி யெம்பெருமான்—முன்புதவஞ்
செய்த பயனென்றே சிந்தையுடன் றன்வாயிற்
பெய்தா னவலோர் பிடி. (கருசா)

தேட்டாச் சுவையமருஞ் சிந்தை யுடன்சிறிது
போட்டா லுடம்புநனி பூரிக்கும்—கேட்டாலும்
யாவர்க்கு நாவூறு மென்றயின்றா னப்பிடிதான்
றேவர்க்கன் றூட்டினேன் றேர்ந்து. (கருஎ)

முன்னுமவ லொன்று முனைமுறிந்த தில்லையே
தின்னுதற்குச் சர்க்கரையுந் தேவையில்லை—யுன்னு
முலகெல்லா முண்டோனவ் வோர்பிடிதான் கொண்டு
நலமுடனே தின்றா னயந்து. (கருஅ)

அவலி லெனக்குமிக வாவலென வுன்றன்
செவிதனிலே கேட்டாயோ செப்பாய்—புவியதனின்
முன்பு மொழிந்திலனே முன்னவவென் றப்பிடிதா
னன்புடனே தின்றா னவல். (கருகூ)

பாங்காய்க் கொடிற்றொதுக்கிப் பக்குவமாய்ச் சற்றிருத்தித்
தேங்கமழ மென்று சிரமசைத்தே—யோங்குவகை
கொண்டப் பிடியவலுங் கோபாலன் றானயின்றான்
பண்டைவினை யாவும் பறித்து. (கசாo)

பின்போர் பிடியெடுத்துப் பெய்திடுங்கால் வாயினிட
முன்போடி வந்து முளரிமக—ளன்போடு
காந்தன் கரம்பிடித்தாள் கைம்மாவின் கையதனைப்
போந்து பிடிபிடித்தாற் போன்று. (௧௬௧)

இந்தவிதஞ் சொற்ற விருடி தனைநோக்கி
விந்தையிது நன்குரைத்தாய் மேலவனே—சிந்தையுடன்
காந்த னுணத்தடுத்தல் கற்பழகோ வென்றான்சீ
ரேந்து பரிட்சித் திறை. (௧௬௨)

அன்று விடத்தை யரனயின்ற காலையிலுஞ்
சென்று தடுத்ததிலை தேவியுமை—நன்று
கணவ னுணத்தடுப்போர் கற்புடைய ரோநற்
குணவளலே நீயெனக்குக் கூறு. (௧௬௩)

காந்தன் குறிப்பறிந்து காலமது தாழ்க்காம
லீந்துபச ரித்தே யினிமையுடன்—போந்தெவையு
முற்சாகத் தோடியற்ற லுத்தமிதன் செய்கையன்றோ
நற்சாந்தங் கொண்டோய் நவில். (௧௬௪)

பசியறிந்து பக்குவமாய்ப் பார்த்தாவுக் கேற்ற
சுசியறிந் தூட்டிடலாற் றாயோய்—பசுவனைய
தாய்க்குப்பின் றாரமெனத் தாரணியிற் பேர்பெற்றார்
வாய்க்குங் குலமனையார் மற்று. (௧௬௫)

கற்புருவாய்ப் போந்த கருங்குழலாள் காசினியிற்
பொற்புருவாய்ச் சாரும் பொலிவமைந்தாள்—சொற்பிறங்கு
நற்குணத்தா ணற்குலத்தா ளனிலமே நண்ணரிய
சற்குணத்தாள் பூமகளே தான். (௧௬௬)

சும்மா விருக்குஞ் சுகனையத் தோகையவ
ளெம்மா னுணைத்தடுக்க விவ்வுலகி—லம்மா
விசைகுவளோ வென்றுரைத்தா னெவ்வுலக வேந்துந்
திசைகுவியப் போற்றுகின்ற சேய். (கசுஎ)

கலையெல்லா மோர்ந்து கரிசறுத்த தூயோற்
குலமெல்லாங் கொண்டாட வோங்கும்—விலையில்லாச்
செல்வஞ் செழிக்கவெனத் தின்றனனென் றோர்பிடிதான்
செல்வியவ டானறிந்தா டோர்ந்து. (கசுஅ)

பிடியவற்கே செல்வம் பிறங்கும் பினுமோர்
பிடியவனுந் தின்றானேற் பேணு—மடியவராய்த்
தாமமர வேண்டுமெனத் தையலவ டான்றடுத்தாள்
காமரமர் கண்ணன் கரம். (கசுகூ)

அன்றியுமே யன்ப னணிமனைக்கு வேண்டுவது
துன்றியசீர்ச் செல்வமதோ தூயபுகழ்—பொன்றிகழு
மார்பன் பணிசெயலோ மாண்புறுநூல் கேட்டுமிக
வோர்பவனே யுண்மை யுரை. (கஎ0)

ஆதலினாற் காந்தற் கமைந்தவித மாகவுன்னிக்
காதமரும் பொற்குழையாள் காதலுடன்—மாதரது
தன்செயலே தான்செய்தாள் தாரணிதா னேத்திடவே
நன்செயலே தான்புரிவோய் நன்கு. (கஎக)

அன்பருக்கே யென்று மடிமைத் தொழில்செய்மா
லென்புருகப் பத்திசெயு மிம்மறையோற்—கின்பமுட
னீதளித்த லாகு மிதுவாகா தென்குவனோ
தாதளித்த பூந்தாராய் சாற்று. (கஎஉ)

அறஞ்சிறிதோர் மாந்த ரறியாது செய்தாற்
றிறஞ்சிறப்ப மேலுலகஞ் சேர்வார்—மறஞ்சிறிது
மின்றியரு மாதவமா ரிம்மறையோற் கிஃதரிதோ
வென்றியமர் வேந்தே விளம்பு. (கஎந)

பூமகட னோக்கமதைப் பூரணமாய்த் தானறியக்
கோமகற்கு நற்சுகன்றான் கூறியபி—னாமகடான்
வாய்ந்திருக்கு நன்னு வலர்போற்றுஞ் சீர்க்கதையை
யாய்ந்துபினுஞ் சொல்வா னமர்ந்து. (கஎச)

அன்றிரவோர் மென்படுக்கை யண்ணறர வாரியனுந்
துன்றியபே ரானந்தத் தூக்கமுற்று—மன்றிகழுஞ்
சீருவள கத்தையெலாஞ் சிந்தித்துக் கண்வளர்ந்தா
னாரவுள மங்க னமர்ந்து. (கஎரு)

கதிருதிக்குங் காலைக் கடனெல்லா முற்றி
மதிகுலத்து மன்னன்பால் வந்து—நிதியமிகப்
பெற்றவன்போல் யாதொன்றும் பேசாது ஞானநிலை
யுற்றவன்றான் செல்வான்றன் னூர்க்கு. (கஎசு)

அக்காலைக் கண்ணனுமே யன்புடனே தான்வந்து
மிக்கார்வத் தோடடியில் வீழ்ந்திடவே—தொக்காசி
கூறி மகிழ்ந்து குசேலமுனி யேகினனால்
தேறிமுனம் வந்தவழி சேர்ந்து. (கஎஎ)

மலர்வதனம் பேர்த்து மணியதரங் காட்டிச்
சிலதியரைத் தான்சினந்து சீறிக்—குலமறையோற்
கொன்றுங் கொடுத்திலனே யூரனுப்பி வந்தான்மா
னன்றிதென்றார் மாதர் நகைத்து. (கஎஅ)

தாயெதிரே கண்டதுபோற் ருங்கினன் கால்வீழ்ந்தான்
போயெதிரே கொண்டான் புனைவித்தா—னேயமுளா
னென்றே யறிவித்தா னேகென்றான் மாதரிது
நன்றேநன் றேயென்றார் நட்பு. (௧௭௯)

கட்டி யணைத்தான் கரமுகிழ்த்தான் காதலுடன்
றட்டிக் கொடுத்தான்பின் றைவந்தா—னிட்டமுடன்
பொன்னு ரமளி புகவளித்தான் போவென்றான்
மின்னார்நன் றென்றார் வியந்து. (௧௮௦)

மன்னர் பலரிருக்க மற்றிவனை யேமதித்தா
னன்னருளத் தானெனவே நாடினன்—பன்னரிய
வின்மொழிகள் சொற்று னிசைந்துமன மேகென்றான்
மென்மொழியார் நன்றிதென்றார் வேட்டு. (௧௮௧)

குன்றாத நண்பன் கொடுவந் ததைவாரித்
தின்றான் மகிழ்ந்து சிரமசைத்து—நன்றாக
வொன்றேனு மீயாம லோட்டிவிட்டா னின்னவன்சீர்
நன்றேயென் றார்மாதர் நட்டு. (௧௮௨)

மாயோன் செயலை மதித்தறிவார் யார்கொல்லோ
வேயோ வெனப்பொலிதோண் மென்மயில்கா—ளோயாம
லின்னவிதம் பேச விழுக்குடைத்தென் றார்சில்லோ
ரன்னவர்தம் வாயடங்க வன்று. (௧௮௩)

இந்தவித மாத ரியம்ப வெழின்மறையோன்
சந்தமுறுந் தண்டுவரை தானீங்கிக்—கொந்தளிக்கும்
வற்றாப் பெருங்கடலும் வன்பிறவி மாகடலுஞ்
செற்றுனற் றனூர்த் திசை. (௧௮௪)

இரண்டாவது துவரைகாண்ட முற்றிற்று.
ஆகச்செய்யுள். (௩௧௧.)

ஸ்ரீ

மூன்றாவது

# வைகுந்த காண்டம்.

## தெய்வ வணக்கம்.

சிந்தையது தான்றெளியத் தேர்வார் வினையரவுக்
கந்தமுனை பேருவணை மாமென்பர்—சந்தமுந்
தாமேவுந் தொண்டருளந் தோன்றித் துலங்குகின்ற
பாமேக வண்ணன் பதம்.

## நூல்.

எம்மா னருளா லிளைத்த வுடம்புநனி
யம்மாபூ ரித்த தவன்கந்தை—பெம்மான்பொன்
சித்திரமா வாரு மணித்துளவ மாமணியாச்
சித்திரித்தாற் போன்ற சிறந்து. (க)

காதிற் பொலிபொருள்கள் காலொளிபொற் குண்டலமா
நீதிற் பவித்திரந்தான் செம்பொனவிர்—மோதிரமா
மாறியதே மாதவனு மன்மதனு வாய்ந்தனனே
யூறியதே தேக வுரம். (உ)

மாதவமே செய்து மனக்குவிய வேதன்னை
யோதியமர் முத்த ருறவினைபோன்—மாதவனை
நீங்கிப் பறந்ததே நீளுலகை மாய்க்கவெழு
மிங்கிருளை யெய்க்கு மிடி. (ங)

ஐயன் வரவறிந்தே யாதித்த னுங்குளிர
மெய்யின் மிசைவீச மென்காற்று—பையவே
பாலை வனமெல்லாம் பைந்தருக்க ளார்ந்திடுபூஞ்
சோலையெனத் தோன்றிற்றே சூழ்ந்து. (ச)

இவையனைத்துங் கண்டா னிறும்பூது கொண்டா
னவையனைத்தும் வென்றவுயர் நல்லோன்—புவியனைத்தும்
போற்றுங் குசேலனையே போம்வழியிற் றாங்கண்டார்
வேற்றுபல மன்னர் விரைந்து. (ரு)

மணிவார் முடிதோய மாதவன்றன் றாளிற்
பணிவார் சிலர்துதிப்பார் பார்ப்பா—ரணிவா
ரடிதலைமே லார்ப்பா ரகம்பூப்பா ரென்றும்
படிதலைமேற் காப்போர் பரிந்து. (சா)

பொன்னார் வரைமேற் பொலிந்திடுபுத் தேளெனவே
மின்னார் மணிசேர் வியன்றேர்மேல்—தென்னார்
மறையோனைத் தாமேத்தி மாண்புறவே வாழ்த்தி
யிறையோருஞ் சென்றா ரிசைந்து. (எ)

மண்டெரியா மல்வகையே வானத் திடையமரர்
கண்டெரியா மன்மயக்கக் காண்மலரை—யெண்டெரியா
தேங்க விறைத்தனரே யேத்தினரே யெல்லோருந்
தூங்கக் களிக்கடலைத் துய்த்து. (அ)

பல்லியமே தான்முழங்கப் பன்மின்னார் பண்ணுடனே
கல்லியலிற் றாநடிக்க நான்மறையோர்—சொல்லியலார்
வேத முரைக்க வெகுமுனிவ ரேத்தினு
மேதந் தவிர்த்தோனை யே. (கூ)

இன்னபல வெல்லா மெதிர்கண்டுங் கண்ணனடி
தன்னமரு நெஞ்சிற் றவிர்ந்திலனே—மன்னுலகி
லென்று முறுவனவை யெம்மா னருளென்றே
சென்றிடுவான் மாமுனிவன் றேர்ந்து. (௧0)

மன்னர் பலரு மறையோரு மாதவருந்
துன்னுபடை யோருந் தொடர்ந்துவர—முன்னந்
தரைசெய் தவப்பேறுத் தன்னூரைச் சார்ந்தான்
புரைசெய்யாப் புண்ணியன்றான் போந்து. (௧௧)

பழுங்கந்தைப் பார்ப்பான் பரிட்சித்தே வேத
முழுங்கபல மன்னர் முதலோர்—செழுங்கரங்கள்
கூப்பச் சிறப்புற்றுற் கோதிற் றவம்போலப்
பூப்பதொன் றுண்டோ புகல். (௧௨)

தன்னூர்ப் புறஞ்சார்ந்த தக்கணமே தண்மறையோன்
மின்னூரும் பொன்னின் வியனகராய்ப்—பொன்னூரு
மார்பன் றிருவருளான் மாறியதே மாதவர்க்குச்
சார்பாகுந் தன்சிற் றூர் தான். (௧௩)

மற்படுகா னெல்லாமே மாட நிலைவாய்ந்து
சொற்படுநா வல்லோர் சொலற்கரிதாய்—விற்படுபொன்
னூடே விழுந்து நயந்ததுபோற் றோன்றியதே
பீடேரச் சிற்றூர்தான் பின். (௧௪)

அயனுலகுஞ் சொல்லா ரரியுலகு மீசன்
வியனுலகும் பொன்னுலகும் வேற்று—நயனுலகு
மொத்திடுமோ மாயோ னுயரருளால் யாவருமே
நத்திடுவான் வாய்ந்த நகர்க்கு. (௧௫)

நடுநிலைமை நீங்காளை நல்லறமே சூழ்ந்து
கொடுநிலையி னின்றதுபோற் கூமேல்—வடுவற்றோர்க்
கீந்த வுதவிபோ லென்றுமுயர்ந் தோங்கியதே
வாய்ந்தமதிக் கெட்டா மதில். (௧௬)

அமிர்தங் கவர்ந்தோ ரணிநகர்மோ தென்று
திமிதமிடும் பாற்கடலுன் செப்ப—வுமிழ்திரைசேர்
வாரிதியே சூழ்ந்து வளர்ந்ததுபோற் றோன்றியதே
சீரியல்கொண் டோங்குமகழ்ச் சேர்வு. (௧௭)

இந்திரனேன் மேடை யெழுங்கதிரால் வெண்களிறு
கந்துகார்க் கைம்மாவாக் காண்படுதன்—முந்தைமுனி
சாப நினைந்து தளர்ந்துபின் றீருமனத்
தாபம் பிறவிடம்போய்த் தான். (௧௮)

வெள்ளியமா டந்தோறு மேவுமணிப் பூணல்லார்
கள்ளொளிதான் வீச நடுவிருந்த—தெள்ளுதிருப்
பாற்கடலி னுப்பண் பதுமையார் தானமர்த
வேற்குமே யென்று மிசைந்து. (௧௯)

கொல்லுகின்ற யானைக் குழாம்பொழியுந் தானமது
பல்லிடமுஞ் சென்று பரந்திடலான்—சொல்லுகின்ற
தேவர் வழுக்குமெனச் சிந்தித்து மண்மேற்கான்
மேழி நடக்கார் விழைந்து. (௨௦)

மங்கலத்தின் மாண்பும் வகைவகையா மாளிகையுந்
தொங்கலங் கூந்தனற் றோகையரும்—பங்கமிலா
மக்கட் பெருமையு மாதனமு மாவளமு
மிக்க நகரிதுவா மே. (௨௧)

நல்லோரு ஞானிகளு நாலிரண்டு யோகமதில்
வல்லோரு மாதவரு மற்றுமுள—வெல்லோரு
மீதே சுவர்க்கமென வேத்தி விதன்பெருமை
யேதே யெனவுரைப்பல் யான். (௨௨)

இன்னவெலாங் கண்டே யெழின்மா லருள்வலியாற்
பின்னுமுள வென்று பெருமறையோன்—பொன்னவிரு
மாமதில்வாய்ச் சென்றடைந்தான் மன்னர் பலருடனே
பூமதியோர் காணும் புரம். (௨௩)

அப்போ தகங்குளிர வாவலுடன் கையுறைகள்
கைப்போதி லேந்திக் களிசிறப்ப—மெய்ப்போதத்
தானை யெதிர்கொள்வான் சார்ந்தா ரனைவருமே
யானபல மங்கலமே யார்ந்து. (௨௪)

வாழ்ந்தனமே யென்று மலர்முகங்கண் மண்டோயத்
தாழ்ந்தனராய்த் தேருருஞ் சாந்தனிட—மாழ்ந்துமிகு
மன்புடைய ராகி யமைதரவே தாஞ்செல்வா
ரென்புருக மெய்சிலிர்க்க வே. (௨௫)

பல்லியமே யார்ப்பப் பலபடையுஞ் சூழ்ந்துவர
மெல்லியலார் மங்கலமே மேம்படவே—சொல்லியலார்
வேத மதுமுழங்க விதி தனைச்சார்ந்தா
னேதங் தவிர்த்தோ னிசைந்து. (௨௬)

இருபுறமார் மாடத் தெழிற்சாள ரத்தின்
மருவுறவே மாவதனம் வைத்துப்—பொருவில்லா
வாரியனை நோக்கி யறைந்திடுவா ராயிழையார்
சீரியனுஞ் செல்வமதைத் தேர்ந்து. (௨௭)

கிள்ளத் தசையற்றுக் கீற லுடையுடுத்துக்
கொள்ளச்சோ றற்ற குசேலன்றான்—விள்ளரிய
மாதனமே வாய்ந்து வருகின்றான் மன்மதனாய்
சோதரியே காணென்றார் சூழ்ந்து. (உஎ)

கந்தமூ லம்புசித்துக் கானகத்தே தான்வதிந்து
பந்தமறச் செய்தவமே பண்ணிடுவோ—ரிந்தமறை
யோனைப்போல் யாரே யுயர்வடைந்தார் யாரடைவார்
மானைப்போற் கண்ணாய் மதி. (உகூ)

யாவ ரிடத்து மருட்கருணை தாங்கிடுவோர்
தேவரினு மேலென்றே செப்புமறை—மூவருமே
தாம்புகழும் வேதியற்குத் தாரணியி லோபெருமை
மேம்படுவிண் பேறுபல வே. (௩0)

கற்பார் மனைவேண்டக் கண்ண னிடஞ்சென்றே
யற்பா ரவலளித்தே யன்னவனாற்—பொற்பாரும்
போதனைப் பெற்றுப் பெரும்பாக் கியனாகுஞ்
சீரதனைப் பெற்றான் றெளி. (௩க)

காயந் தனைவெறுத்துக் கானிற் றவஞ்செய்து
நேயமுட னென்றே நினைந்திடுவோர்—தேயமெலா
மாளக் கொடுத்தாலு மாயிழையே வேண்டாரே
மாளுமென வெல்லா மதித்து. (௩உ)

பற்றற்றா ரேனும் பரம னளித்ததுதான்
னெற்றுக்கே யாயிடினு மிவ்வுலகின்—முற்றிழையே
தள்ளுவரோ நல்லோர் தகுதியல வென்றுரைத்தே
யெள்ளுவரோ வென்றே வியம்பு. (௩௩)

செந்திருவந் துற்றாலுந் தீமிடிதா னுற்றாலுஞ்
சிந்தைநிலை குன்றார் சிவமுணர்வோர்—முந்தைச்
சனகன்போற் றேய்ந்திடுவார் தாரணியி லென்றுங்
கனகமணிப் பூண்மார்பாய் காண். (௩௪)

பற்றற்றா னுக்கிப் படர்திருவும் பாக்கியமு
முற்றிழையு நன்றென்பார் முன்னாளி—னற்றவமார்
மெய்ச்செவன ரென்பான் விரும்பு மிளமையுற்றுத்
துய்ச்சிலனோ போகமதிற் றேய்ந்து. (௩௫)

என்ற சுகனடிதா னேத்திச் செவனரெனு
மின்றவத்தோன் யாரிளமை யேற்றமீதவன்—மன்றனுற்ற
தெவ்வா றருளெனவே யேந்துபுகழ் வேந்தனுக்கே
யவ்வா றருள்வா னவன். (௩௬)

பேருலகம் போற்றும் பிருகு வெனுந்தவத்தோன்
சீருறுநன் மைந்தன் செவனமுனி—மேருநிகர்
கோலமது தான்கொள்ளுங் கோதிற் பனிவரையிற்
சாலவே செய்தான் றவம். (௩௭)

தவம்புரியுஞ் சாந்தன் சரீரமெலாந் தானே
புவனமென மூடியதே புற்று—நவமான
கற்பு நனிபடர்ந்து காமருபூ வீன்றிடுமே
சொற்பெறுமப் புற்றதனைச் சூழ்ந்து. (௩௮)

அக்கா லகிலமதை யாளுஞ்சை யாதிமனன்
றொக்கபுகழ்ச் செல்வி சுகனியென்பாண்—மிக்கநறும்
பைந்தா துகுக்கும் படர்மலர்தான் கொய்வான்கான்
வந்தாளே மாதருடன் மற்று. (௩௯)

பூக்கொய்வான் போந்த புனிதையவள் செந்தேனை
வாக்குகின்ற மாமலர்சேர் வன்மீக—நோக்கினாள்
வந்தடைந்தா டான்றனியே மற்றதனை யாய்ந்திடுவான்
சந்தடிதான் செய்யாமற் றான். (௪0)

புற்றின்கண் ணோக்குதலும் புண்ணியன்றன் செய்யவிழி
முற்றுறவே தான்கண்டாண் மொய்குழலாண்—மற்றதனைப்
பொன்வண் டெனவயிர்த்தோர் பூங்கொம்பாற் குத்திடலு
மூன்கொண் டெழுந்தான் முனி. (௪௧)

யோகமது குன்ற வுயர்புற்றில் வந்தடைந்தென்
னாகமது நோகவிது யார்செய்தார்—வேகமுட
னுற்றுணர வாய்வா னுறுங்கா லுயர்கயலைச்
செற்றவிழி மான்கண்டான் றேர்ந்து. (௪௨)

பூமகளோ பொன்மகளோ பொன்னாட் டிறைமகளோ
நாமகளோ நல்லிரதி நன்மகளோ—கோமகளோ
வென்றயிர்த்தான் காமனுமே யின்பமல ரம்பவன்மேல்
வென்றிகொள விட்டான் விரைந்து. (௪௩)

பொங்கியெழுங் காமப் புலிக்கத்தீப் பற்றிநனி
மங்குதலி லாதழற்ற மாதவத்தோன்—கொங்கலர்மென்
கூந்தன் மடவாள் குளிர்கையைப் பற்றினனால்
போந்ததுயர் போகும் பொருட்டு. (௪௪)

வெருககொண்டு மெய்விதிர்த்து வேர்த்துப் பதைத்துப்
பொருக்கெனவே கைப்பறித்துப் போந்து—குருக்கொண்ட
வஞ்சிலம்பே யார்ப்ப வாங்கமரும் பாங்கியர்பாற்
றஞ்சமென வீழ்ந்தா டவித்து. (௪௫)

# குசேல வெண்பா.

பாயலினைத் தென்னவோ பார்த்துப் பயந்தாளென்
றாயிழையின் செய்கை யறியாம—னேயமுடன்
பாங்கியர்கள் பற்பலவாம் பக்குவத்தைப் பண்ணியுமே
நீங்ககலு மார்க்கமிலை நேர்ந்து. (௪௬)

அப்பொழுது சையாதி யண்ண லகங்குளிரத்
துப்பிதழ்வாய்ப் பன்மனைவி சூழ்ந்துவர—வொப்பொருவும்
பூவனத்தின் காட்சிப் பொலிவுதனைக் கண்டிடுவா
னுவலுடன் போந்தா னவண். (௪௭)

மன்புற்றி னின்று வருமா தவற்கண்டே
யன்புற் றடிபணிந் தன்னோன்ற—வின்புற்ற
கண்ணிற் குருதிநீர் காலுமிது யார்செயலென்
றெண்ணிமிக வாய்வா னிசைந்து. (௪௮)

பாங்கியர்தம் பாலிருந்த பான்மொழியாந் தன்மகளை
யோங்குவகை யோடுற் றுயர்முனிக்கித்—தீங்கதனை
யார்செய்தா ரென்றிடவே யந்நிகழ்வு முற்றுரைத்தாள்
தார்செய்த வேந்தன் றனக்கு. (௪௯)

என்செய்தாய் பேதா யெனவிரங்கி யாங்கெய்தி
மன்செய்த மெய்யோய் மடமகளின்—புன்செய்கை
மன்னித் தருள்புரிவாய் மாதவனே யென்றிரந்தான்
சென்னியவன் பொன்னடியிற் சேர்த்து. (௫௦)

இப்பொழுதே யுன்மகளை யென்றனக்குச் சீர்மனையாத்
தப்பறநீ யீந்திடுவாய் தாராயேல்—வெப்புறமென்
சாபத்தீ பற்றுமெனச் சாற்றிடலுஞ் சம்மதித்தான்
கோபத்தீக் காற்றாத கோ. (௫௧)

மன்னர் பலரை வரவழைத்து வேதமதிற்
சொன்ன படியே துடியிடையை—முன்னரழன்
மன்றல் வினைசெய்து மாமுனியின் கைக்கொடுத்தான்
வென்றிதரு வில்லமர்கை வேந்து. (ருஉ)

சீலமிகு மாமுனியுஞ் செல்வச் சுகனியுமே
கோலமுடன் கூடிக் குலாவுநாள்—ஞாலமகிழ்
சீரா ரசுவினியாந் தேவருமே மோகித்தார்
காரார் குழலாளைக் கண்டு. (ருங)

அமரர்நோய் தீர்க்கு மசுவினியாந் தேவர்
சமரமிகும் வேளாற் றவித்துத்—திமிரமிகும்
பூங்குழலாய் மாரன் பொரவிசைந்தான் காவென்று
ராங்குழலு மன்னு ரறிந்து. (ருச)

சிந்தை சிவமாஞ் செவனமுனி யெங்கணவ
னெந்தைசை யாதிமன னென்றறிவீர்—நந்து
நரகத் திடைப்படுத லுடாம லென்றன்
விரகத்தி னின்றுய்வீர் விட்டு. (ருரு)

ஏந்தெழிலே மிக்க விளமை தனைவாய்ந்து
போந்தவெம் போகம்போற் பொன்னழிந்து—தேய்ந்த
துறவிதரும் போகஞ் சுகப்படுமோ நல்ல
நறவுதருஞ் சொல்லாய் நவில். (ருசு)

காந்தனுடன் யாமுங் கடிமலரித் தீர்த்தத்திற்
போந்து படிந்தாற் பொலனவிர—வாய்ந்திளமை
கொண்டிடுவோ மாதே குறிப்பா யிசைந்தவரை
மண்டிடுபே ரோகையுடன் வந்து. (ருஎ)

இன்ன வுரைதன்னை யின்னுயிர்த்தன் னையகற்குச்
சொன்ன வுடனேநற் றாமுனியு—மன்னதற்குச்
சம்மதித்தான் றைய றனிக்கற்பின் மொய்ம்பெவருந்
தம்மதியிற் கொண்டிடவே தான். (௫௮)

போந்துமல ரத்தடத்தே போய்ப்படிய மூவருமே
யேந்தெழில்வான் சோதி யெனவெழுந்தார்—காந்தையவள்
கற்பின் வலியாற்றன் காந்தனையே கண்டுமிகு
பொற்பின் விளங்கினள்பொன் போன்று. (௫௯)

தேசா ரசுவினியாந் தேவர் திறம்போற்றிப்
பேசாநின் றேங்கும் பெருமையோ—னேசமுட
னில்லா ளுடன்கூடி யின்புற் றிருந்தனனே
சொல்லாரும் போகமதைத் துய்த்து. (௬0)

மாதரவர் சேர்ந்து வகுத்துரைக்க விவ்வாறு
மாதவனுஞ் சேர்ந்தான் மனைவாயி—லாதரவிற்
பல்லோரு மானந்த பாட்டமதிற் றும்படிய
நல்லோரும் போற்றிடவே நன்கு. (௬௧)

தேரி னிழிந்து சிறுமனையை நோக்குதலும்
பேரின் பொலன்மனையாப் பெட்புறலுஞ்—சீரின்
பொலிவளனைப் பார்த்துத்தான் புன்சிரித்தான் ஞான
மலிவளனைக் கண்டோன் மகிழ்ந்து. (௬௨)

அந்தணன்ற னில்லாளு மான்ற வெழில்வாய்ந்து
வந்தணைந்தாண் மின்போலு மாதருடன்—சிந்தைமகிழ்
துங்கிடுமா றெப்பிற் றுணைக்கணவன் றன்வரவைத்
தாங்கிடுமா றன்புடனே தான். (௬௩)

மின்னற் கொடியார்பான் மேவு மரகதமா
நன்ன ரிலைபடர்ந்து நல்வைரப்—பொன்னவிர்பூ
வாய்ந்துதிகழ் மற்றை மணிகளுமே காய்கனியா
வேய்ந்துவிளங் கிற்றே யிசைந்து. (௮௪)

வந்தனை தான்செய்து மகிழ்நனைப்பொன் னாதனத்திற்
சிந்தையுற வேற்றிச் சிரகநீர்—தந்துதவப்
பொற்றா மரைவிளக்கிப் பூம்பட்டா லந்நீரை
யொற்றாநின் றிட்டா ளுவந்து. (௮௫)

சந்தனமே பூசித் தகைசான்ற பூமாலை
புந்தியுடன் சாத்திப் பொலன்றாமங்—கந்தமெழ
நீட்டி யுபசரித்து நீராஞ் சனம்வளைத்துக்
காட்டிவணங் கிட்டாள் கனிந்து. (௮௬)

இன்னவித மேந்திழையா ளேத்தி மகிழ்ந்திருப்ப
வன்னவனு மன்புடனே யம்பொனவிர்—சொன்னவரை
யேய்க்குந் திருமா ளிகைக்கெழுந்தா னெங்ஙனுமே
வாய்க்குமிசை யுள்ளான் மகிழ்ந்து. (௮௭)

பொற்குவையு முத்தின் பொலன்குவையுஞ் சீர்பவள
நற்குவையும் போற்றரிய நல்வைரக்—கற்குவையு
மற்றை மணிக்குவையும் வாய்ந்த வறைதோறு
முற்றுறவே கண்டான் முனி. (௮௮)

சுட்டி நுதன்மீது தோன்ற விடையினிடம்
பட்டுடைதா ளோங்கிப் பகட்டவே—விட்டொளிதான்
வீசுங் கலன்வகைகண் மெய்யோங்க வேணமைந்தர்
பேசுமுறை கேட்டான் பெரிது. (௮௯)

பைம்பொற் கலத்தினிடைப் பல்வகையாம் பக்கணமுஞ்
செம்பொற் பருப்பனமுந் தேர்ந்தூட்ட—வம்புதல்வர்
மற்றதனைப் பாராது வாய்ந்தவிளை யாட்டினிட
முற்றதனைக் கண்டா னுவந்து. (எ0)

வீட்டின்க ணெவ்வோர் வியனறையிற் சேர்வளமெந்
நாட்டின்கண் சென்றாலு நண்ணரிதா—லேட்டின்கண்
டீட்டி முடியாதாற் றெய்வத் தருள்வலியைக்
கூட்டிப் புகல்வதெவன் கூறு. (எக)

அருளாற் கிடைத்த வருநிதிய மெல்லா
மருள்வழியே யாகுகவென் றுய்ந்து—பொருளனைத்து
மன்பர்க்குந் தேவா லயப்பணிக்கு மான்றறிவா
ரின்பர்க்கு மீந்தா னிவன். (எஉ)

வேசையே போலும் வியன்மக்கள் செல்வமெனப்
பாச மறுத்தோர் பகருரையை—யாசையுடன்
கொண்டு தனமெல்லாங் கூமுழுது மேயளித்தான்
மண்டுபே ரோசையுடன் மற்று. (எங)

இவ்விதமா யில்லறத்தி லீரேழ் புவிபுகழச்
செவ்விதய மோடு திகழ்நாளி—லௌவியமே
செற்றமுனி யிச்செல்வஞ் சேர்ந்ததெவ னென்றொருநா
ளுற்றுணர வாய்வா னுளம். (எச)

கேசவன்பா லொன்றையுமே கேளா திருந்திடவும்
பாசமிகும் பாழ்ஞ்செல்வம் பற்றியதென்—மோசமது
செய்திடுமே யிந்நிதிதான் சேர்ந்தோர்க்கு ஞானநிலை
யெய்திடுமோ வம்மா வினி. (எ௫)

எல்லா வுயிர்க்கு மிழிவா யிருக்குமெனைப்
பொல்லாப் பெருஞ்செல்வம் பூதலத்தில்—வல்லார்க்கு
மேலா யிருத்திடுமே மேலவனே யிக்கொடுமை
யேலா தெனக்கே யினி. (௭௬)

பள்ளமதிற் றண்ணீர்தான் பாய்ந்திடல்போற் கண்ணனருள்
வெள்ளமது தாழ்ந்தோர்பால் மேவிடுமே— கள்ளமிலார்
சங்கந் துறத்தித் தனையுயர்த்துஞ் செல்வத்தாற்
பங்க முளவாம் பல. (௭௭)

மெய்ப்பொருளை யேவிலக்கி மீளா விருள்கொடுக்கும்
பொய்ப்பொருளைப் போக்கப் புயல்வண்ண—னைப்புகழப்
பாடித் துதிப்பான் பரவசமா யன்புடனே
யாடி யழுவா னவன். (௭௮)

மேனுண் மறைகவர்ந்து வேலையிடஞ் சென்றோனை
மீனா யுயிர்முடித்து மீட்டிமறை—யானு
வருளை யுவந்தளித்த வப்பனே போற்றி
பொருளை மறைத்திடுவாய் போந்து. (௭௯)

பண்டு கடல்கடையப் பர்வதமே தானழுந்தக்
கண்டு கமடக் கவினுருவங்—கொண்டு
பரித்த மணிவண்ணா பாதபலர் போற்றி
யெரித்திடுவா யிப்பொருளை யின்று (௮0)

பாவியவன் றன்சுருட்டிப் பாரதனைப் பூதலத்தின்
மேவியிட வேன விழுவுருவா—யாவிதனை
வாங்கிப் புவிவிரித்த மாலே யடிபோற்றி
தீங்கதனைத் தீர்ப்பாய் தெரிந்து. (௮௧)

எங்கு முளனென் றியம்பியசொற் காத்தற்கே
யங்குபெருந் தூணி லடலரியாய்ப்—பொங்கியெழுந்
தார்த்துக் கனக னகம்பிளந்தோய் சீர்போற்றி
காத்திடுவா யுள்ளங் கனிந்து. (அஉ)

மாவலிபான் மூவடிமண் வாங்கிமூன் றாமடியிற்
சேவடியை யன்னோன் சிரமதனி—லாவலுடன்
வைத்து மகிழ்ந்தருளும் வாமனா போற்றியுன்பாற்
கத்து மடியேனைக் கா. (அ௩)

அந்தணரைப் பேணா தகங்கொண்டு தத்தமது
சிந்தையினிற் கோனடத்துஞ் சீரில்லார்—சந்ததமும்
பாரதனின் மாளப் பரசெடுத்த பண்ணவவுன்
பேரதனைப் போற்றுமெனைப் பேண். (அ௪)

மாந்தரெலா நன்னெறியில் வந்தொழுகத் தண்ணருளாற்
சாந்தமிகு மன்னன் றயரதன்பா—லேந்தெழிலார்
செல்வத் திருமகனாய்ச் சேர்ந்தருளுஞ் சீராமா
நல்வழியிற் சேர்த்தருள்வாய் நன்கு. (அ௫)

போரதனைச் செய்யாது போயிருப்ப வேவிசயன்
பேரதனை நாட்டப் பிறங்குமறைச்—சீரதனை
யூட்டி யமர்முடித்த வுத்தமனே நின்னருளைப்
போட்டிடுவா யுள்ளம் புகுந்து. (அ௬)

கந்தை யவறின்று காத லுட னென்றனையே
சிந்தை குளிரச் சிறப்பித்தா—யெந்தையே
நெஞ்சுருகப் போற்றி நினைந்திடுமெற் குன்பதமே
தஞ்சமலான் மற்றுளவோ தான். (அ௭)

கண்ணூரு நீரரும்பக் கைதலைமேற் றன்மலரப்
பண்ணூருந் தோத்திரங்கள் பண்ணுங்காற்—றண்ணூரு
மன்புருவா மண்ண லருமறையோன் றன்மகிழ
வின்புருவாய்ப் போந்தா னிசைந்து. (அஅ)

தனக்கோ ருருவமிலாத் தண்ணீருங் காணாத்
தனக்கோ ருருவெடுத்தல் சாலுந்—தனக்கோ
ருருவமிலா வெம்மா னுறுகுளிர்நெஞ் சன்பர்க்
குருவமொடு போந்தா னுவந்து. (அகூ)

செங்கதிரும் வெண்கதிருஞ் சேர்ந்த செவியேய்ப்பப்
பொங்குகதிர்ச் சக்கரமும் போற்றுகின்ற—சங்கமுமே
யெம்மான் வலமிடமே யேந்தொளிதான் வீசிடவே
யம்மான்பாற் போந்தா னணல். (கூ0)

பூமா துடல்சிலிர்க்கப் புண்ணியர்க டாமேத்தத்
தேமா மலர்சொரியத் தேவுலகோர்—பாமா
மறைமுழங்க வந்தடைந்தான் மால்வண்ண னன்பன்
குறைவிழுங்கத் தன்னுளத்தே கொண்டு. (கூக)

இங்கேநீர் வம்மி னின்றே தொழுமின்காள்
பங்கே ருகக்கண்ணற் பாடுமின்கள்—சங்கேந்துங்
கண்ணனடி சேர்மினெனக் கானூ புரங்கலிப்பப்
புண்ணியன்பாற் போந்தானப் போது. (கூ௨)

கண்டான் விரைந்தெழுந்தான் கால்வீழ்ந்தான் மெய்யன்பு
கொண்டா னவனெளியிற் கூடினூ—னுண்டா
னருளமுத மெய்சிலிர்ப்ப வாடினூ னென்றுந்
தெருளமுத மூட்டுமுனி தேர்ந்து. (கூ௩)

வேதமுடி தேராவவ் விண்டுவினைச் சிந்தித்துப்
போதமுடி வாய்நிறையும் பூரணமாய்—நாதமுடி
தானாய்ப் பரபோதத் தன்மயமாய்த் தானமர்ந்தா
னானா வருள்சே ரவன். (கூச)

கானத் திடையமர்ந்துங் காய்கனியே தானுகர்ந்து
மான வரைவதிந்து மாதவமே—மோனமுறச்
செய்திடுவோர்க் கன்றிச் சிறந்திடுநின் மெய்க்காட்சி
யெய்தியதே நாயேற்கு மின்று. (கூரு)

வெஞ்சகடந் தானுதைத்தும் வெங்கானிற் றானடந்து
நஞ்சரவ மீது நடித்துமே—மஞ்சுதவழ்
கன்னிகரென் னெஞ்சிற் கழலிணையைத் தானிருத்த
வுன்னிப் பழகினைகொல் லோது. (கூசு)

என்றுபல பேசி யிருந்தழல்வெண் ணெய்யெனவே
யொன்றியதன் னுள்ள முடைந்துருக—நின்றமறை
யன்பனைக்கண் ணோக்கி யருட்டிருமா றானுரைத்தா
னின்பனை வேட்டதெவ னென்று. (கூஎ)

பண்ணார் மறைமுடியும் பங்கயத்தோ னுங்காணா
வண்ணானின் பாத மடைந்தேற்குத்—தண்ணாருங்
கற்பகத்தே வின்பதமுங் காசினியி லெப்பதமு
மற்பமெனத் தோன்றிடுமே யாம். (கூஅ)

எப்பிறப்பே யுற்றாலு மெம்மானின் பொன்னடியை
யப்பிறப்புத் தோறு மகத்திருத்தி—யிப்பிறப்பி
லெய்தியது போல விசைந்திடுவா யார்க்குமருள்
செய்திடுவா யென்றான் றெளிந்து. (கூகூ)

முன்பும் வெறுத்தேன் முழுமுதலே நின்பால்யான்
பின்பும் விழையேன் பெருஞ்செல்வம்—துன்புறவே
தானளிக்க லாமோநீ சான்றவநின் பாதமலர்
தேனளிக்கத் தேக்குவதுந் தேர்ந்து. (க00)

ஆதலா லைய வநித்தியவிச் செல்வத்தின்
மேதகமுன் னேர்ந்தமிடி வேண்டுகிறேன்—காதலுட
னன்பர் மனவிருப்ப மாற்றுவிக்கு நீயெனக்கு
மின்பமுடன் செய்வா யிது. (க0க)

மருவி நினைச்சார்ந்தார் வன்றுயரத் தாழ்த
றருமமோ மாதவனே சாற்றாய்—திருவளித்த
துன்பா லணைந்தோர்க்கா முத்தமனே மற்றதற்குத்
துன்பால் வருந்துவதென் சொல். (க0உ)

பெய்ப்பொருடா னேர்ந்தோர்கண் மேவியெவ னுற்றிடினும்
பொய்ப்பொருடான் பற்றுவரோ புண்ணியனே—யிப்புவியி
லந்தா மரைநீர்போ லாருமனை யிச்செல்வஞ்
சிந்தா குலஞ்செயுமோ செப்பு. (க0ங)

மீண்டுந் தனமே விழைவதிலை யென்றால்யாம்
வேண்டும் பொருளையே வெறுத்திட்டாய்—யாண்டுமஃ
தென்னை விழையா திழிந்ததொக்கு மாய்ந்திலைகொ
லுன்னியதை யிப்போ துணர். (க0௪)

ஆதலா லன்ப வநிதியப் பற்றின்றிக்
காதன் மனையோடு காசினியிற்—பேதமறப்
பன்னாட்கள் வாழ்ந்தெம் பதியெய்த மாமுனிவோர்
மன்னாநிற் கீந்தேன் வரம். (க0ரு)

மாமறையோன் றன்மறுக்கா வண்ண மகிழ்ந்துரைத்து
மாமறைக ளுந்தேரா மான்மறைந்தான்—றேமறுத்த
வந்தணனு மண்ண லருள்வியந்து பன்னாட்கள்
சிந்தையுற வாழ்ந்தான் சிறந்து. (கoசு)

கண்ணனடி யேகருதிக் காசில் குசேலமுனி
யுண்ணெகிழப் போற்று மொருதினத்தில்—விண்ணவர்கள்
கற்பகப்பூத் தாஞ்சொரியக் கண்ணனுல கஞ்சேர்ந்தான்
விற்பனர்கள் போற்ற வியந்து. (கoஎ)

வாரிதனில் வந்தடையு மாநதியின் றேற்றமெனக்
காரியலுங் கண்ணன் கழற்போதிற்—பேரியலு
மாதவனும் வந்தடைந்து மாறு மகிழ்ச்சியுட
னாதவனிற் றன்பொலிந்தா னாங்கு. (கoஅ)

என்ற சுகமுனிவ னேர்திகழும் பொன்னடிக்கே
யொன்றுங் கருத்தினனு யுத்தமனே—துன்றியசீர்க்
காதையாற் சன்மக் கடல்கடந்தே னென்றன்ம
னேதையான் சொல்வே னினி. (கoகூ)

மூன்றாவது

வைகுந்த காண்டம் முற்றிற்று.

ஆகச்செய்யுள் சஉக.

---

வாழி.

வேதமது வாழி வியனுலகோர் தாம்வாழி
பூதலமன் வாழி புண்ணியரும்—போதமம
ரன்பன் குசேல னரும்புகழு மாலருளு
மின்புடனே வாழி யிசைந்து.

ஆகச்செய்யுள் ௪௨௨.

குசேல ஸ்வாமிகள் திருவடிகளே சரணம்.

மகாமகோபாத்யாய, டாக்டர்
உ. வே. சாமிநாதையர் நூல் நிலையம்
அடையாறு, சென்னை-20.

# குசேலவெண்பா அரும்பதவுரை.

| செய்யுளெண். | அரும்பதவுரை. |
|---|---|

## தெய்வவணக்கம்.

க கடவுளமர்ந்த-கடவுள் விரும்பிய.
புழைக்கைம்மா-உள் துளையுடைய துதிக்கையார்ந்த யானை.
உ மாற்றவர்-பகைவர்.
வேழம்-யானை. ஈங்கு கஜேந்திரனை யுணர்த்துகின்றது.
மெல்லியலாள்-இலக்குமி.
ஆழம்-கடல். ஈங்கு திருப்பாற் கடலை யுணர்த்துகின்றது.
ங பழுதார்புரை-பொய்நிரம்பியகுற்றம்.
அ சடலம்-சரீரம்.

## அவந்திகாண்டம்.

உ முகமன்-உபசாரம்.
ங காயம்-ஆகாயம்.
ஆர்கலி-கடல்.
ரு விரைநீர்-வாசனை பொருந்தியநீர்.
சு காதுவன-கொலைத் தொழில்புரிவன.
காத்திரம்-உடல்.
காந்துவன-சுடுவன.
அ பரவ-துதிக்க.
கூ தோம்-குற்றம்.
மறுகு-தெரு.
மாகம்-ஆகாயம்.
க0 நந்தலில்-கெடுதலில்லாத.
பின்னோர்-சூத்திரர்.
கக மும்மைப்படு பொருள்-வரைப்படுபொருள், திரைப்படு பொருள், தரைப்படு பொருள் ஆகிய மூன்றுவகைப்படுபொருள்கள்.
கஉ மருமம்-மார்பு.
மாறு-பகை.
கங மூன்றுதீ-ஆகவனீயம், காருகபத்தியம், தக்கணாக்கினி

| செய்யுளெண். | அரும்பதவுரை. |
|---|---|
| | யம் எனும் மூவகையகங்கி. |
| | காசகல்-குற்றம்நீங்கிய. |
| கச | ஆவணம்-கடைவீதி. |
| கரு | கரடம்-யானைமதம். |
| | கலுழி-கலங்கனீர். |
| | வெம்மாவி-கடுமையுள்ளவாசனை. |
| | ஞாழல்-குங்குமமரம். |
| கசு | ஏனக்குருளை-பன்றிக்குட்டி. |
| கஅ | ஊறி-தோன்றி. |
| உ0 | தத்துவம்-உண்மை. |
| உஉ | பீடு-பெருமை. |
| | முக்குற்றம் - ஐயம், திரிபு, அறியாமை எனும் மூன்று குற்றங்கள். |
| உரு | தற்போதம்-ஜீவபோதம். |
| | அற்போதம்-அஞ்ஞானம். |
| உசு | பொல்லம் - துண்டு, தைத்தல். |
| உஅ | மீளி-தலைவன், அரசன். |
| ஙக | அலர்சொல்-பழிச்சொல். |
| ஙரு | ஏதமிலா-குற்றமில்லாத. |
| ஙஎ | தோற்குழு - யானைக் கூட்டம். |
| | நீவாரம்-வனநெல். |
| ச0 | எவ்வம்-துக்கம். |

| செய்யுளெண். | அரும்பதவுரை. |
|---|---|
| சச | வீழ்தாயே-ஆசையுள்ள அன்னையே. |
| சசு | வற்கலை-மரவுரி. |
| ரு0 | புல்லுரை-அற்பமான சொல். |
| ருக | அடிசில்-சோறு. |
| ருஉ | இந்து-சந்திரன். |
| ருங | ஆக்கம்-செல்வம். |
| ருச | கலாம்-கலகம். |
| ருரு | அல்லல்-துன்பம். |
| | கூற்றுவன்-யமன். |
| ருஎ | சேய்-குழந்தை. |
| | வில்வதனத்தாள்-பிரகாசம் பொருந்திய முகத்தை யுடையவள் |
| ருஅ | நட்ட-சிநேகித்த. |
| | தாவில்-அழிதலில்லாத. |
| சு0 | தெண்ணிலையான்-தெளிந்த நிலையையுடையவன். |
| சுஉ | இக்கனைய-கரும்புபோன்ற. |
| சுங | வேளை-மன்மதனை. |
| சுரு | அலரவன்-பிரமன். |
| சுசு | குய்யம்-வஞ்சனை. |
| | சலதி-சமுத்திரம். ஈங்கு திருப்பாற்கடல். |
| சுஎ | மூங்கையர்-ஊமையர். |

| செய்யுளெண். | அரும்பதவுரை. |
|---|---|
| சுஅ | இன்னல்-துன்பம். |
| | நத்திடார்-விரும்பார். |
| சுகூ | குழலான்-வேய்ங்குழலுடையவன். |
| | மூரித்தனம்-பெரியதனம். |
| எக | கொன்-அச்சம். |
| | மைம்மைமந்தை-பிருந்தஅஞ்ஞானத்தை, இருண்டமயக்கத்தை. |
| எச | மயல்-மயக்கம். |
| எகூ | உலையா-கெடுதலில்லாத. |
| அ0 | களைகண்-ஆதரவு. |
| | தெண்ணன்- தெள்ளியதும் நன்மையுமான. |
| அக | தணந்தோர்-நீங்கினோர். |
| அந | முன்றுன்னி - முன்பு நெருங்கி. |
| அச | கையுறை-கையில் கொண்டு போகும்பொருள். |
| அரு | கணமே-உடனே. |
| | அல்லல்-துன்பம். |
| அசு | பிதிராமல்-உதிராமல். |
| அஅ | மஞ்சு-மேகம். |
| அகூ | பானு-சூரியன். |
| கூக | மீளி-தலைவன். ஈங்கு குசேலமுனி. |

| செய்யுளெண். | அரும்பதவுரை. |
|---|---|
| கூஉ | எழுநா-அக்கினி. |
| கூந | அறல்-நீர். |
| | வளி-காற்று. |
| | கூ-பூமி. |
| கூரு | வாங்கு-வளைந்த. |
| கூசு | நத்தன்-சங்கேந்தியகடவுள் |
| கூஅ | விழுமியோன-மேலோன். |
| க0க | துனி-துன்பம். |
| க0ரு | காஞ்சிரம்-எட்டிமரம். |
| க0சு | க-வதுமால் - மேகம். |
| | உ-வதுமால்-திருமால். |
| | ந-வதுமால்-பெருமை. |
| ககக | வாரி-கடல். |
| ககஉ | கொன்- இளமை அல்லது பெருமை. |
| ககரு | அந்தம்-அழகு. |
| ககசு | கால்-காற்று. |
| | ஆலும்-சேரும் அல்லது ஒலிக்கும். |
| ககஎ | கூம்பு-பாய்மரம். |
| | சோங்கு-மரக்கலம். |

## துவரைகாண்டம்.

| செய்யுளெண். | அரும்பதவுரை. |
|---|---|
| உ | கதித்த-எழுந்த. |
| ந | மறன்-பாவம். |

| செய்யுளி லக்கம். | அரும்பதவுரை. |
|---|---|
| சு | தற்போதம்-ஜீவபோதம். |
| | சிற்போதம்-ஞானபோதம். |
| | அற்போதம்-அஞ்ஞானம். |
| எ | முகிலேய்- மேகத்தையொத்த. |
| அ | வேழம்-அகழைச் சொல்லுமிடத்துயானை; கவியைச் சொல்லுமிடத்துகரும்பு. |
| கக | முன்னும்-நினைக்கும் |
| | பின்னோர்-சூத்திரர். |
| கஉ | வில்-பிரகாசம். |
| க௪ | கன்னல்-கரும்பு. |
| கசு | இருக்கு-வேதம். |
| கஅ | நாப்பண-நடு. |
| ககூ | சதிபதி-ஸ்திரி புருஷாள். |
| | பீடம்-மணமேடை. |
| உரு | உவரி-கடல். |
| உசு | கைதவம்-வஞ்சனை. |
| உஎ | நவையுடையோர் - பழிபாவமுடையோர். |
| உஅ | எல்லும்-சூரியனும். |
| உகூ | ஊர்திகள்-வாகனங்கள். |
| | சொல்லேந்து-புகழேந்து. |
| | கோலம்-அழகு. |
| ௩௦ | நன்முகமன்-நல்உபசாரம். |
| ௩க | நென்னல்-நேற்று. |

| செய்யுளி லக்கம். | அரும்பதவுரை. |
|---|---|
| ௩௩ | தமர்-பந்து. |
| | சமர்-யுத்தம். |
| ௩ரு | யாதிருந்தால்- நினைவிருந்தால். |
| ௩எ | அற்றம்-சமயம். |
| ௪௦ | மேதி-எருமை. |
| ௪க | சாரல் - தூறல், மழைபெய்தல். |
| | தேரல்-தேன். |
| ௪உ | ஏதிலார்-பகைவர் |
| | பேதிலா-மதி மயக்கமின்றி. |
| ௪௩ | வரை-மலை. |
| ௪எ | தாது-மகரந்தப்பொடி. |
| ௪அ | காவில்-தோட்டத்தில். |
| ரு௦ | செவ்வேந்தர்-பகையரசர். |
| ருக | காசு-குற்றம். |
| ருஉ | கன்றி-நைந்து. |
| | கலுழ்ந்து-கலங்கி. |
| ருரு | பேரொன்று-பேர் + என்று-பெரியசூரியன் அதாவது ஞானசூரியன். |
| ருஅ | அம்மை-மறுபிறப்பு. |
| சுஉ | வேலை-கடல். |
| சுகூ | திருக்கு-கண். |
| எக | நசை-ஆசை. |
| எ௪ | கேத்திரம்-க்ஷேத்திரம். |

| செய்யுளின் எண். | அரும்பதவுரை. |
|---|---|
| | துரிசு-குற்றம். |
| ௭௮ | சேணுடு-சுவர்க்கம். |
| | சேர்வு-இருப்பிடம். |
| ௭௯ | உவளகம்-அந்தப்புரம். |
| ௮௧ | கார்-மேகம். |
| ௮௨ | ஏறு-உயர்ச்சி. |
| ௮௬ | மீன்-நட்சத்திரம். |
| ௮௭ | தானை-வஸ்திரம். |
| ௯௩ | ஓகை-சந்தோஷம். |
| ௯௫ | மலக்குறும்பு-அழுக்குநிறை ந்தபொல்லாப்பு. |
| ௯௬ | காப்பினர் - காவலாளிகள், துவாரபாலகர். |
| ௧௦௦ | அண்மை-சமீபம். |
| | ஓவியம்-சித்திரம். |
| | பூங்கதிர்- அழகியகிரணம் வாய்ந்தசூரியன். |
| | சேர்க்கை- சேருமிடம் |
| ௧௦௩ | படி-பூமி |
| ௧௦௬ | திலகம்-பொட்டு. |
| ௧௧௦ | கருனை-பொரிக்கறி. |
| ௧௧௨ | விரை-வாசனை. |
| | பாகடை-பாக்கு,வெற்றிலை. |
| | குஞ்சம்-ஓர்வகைவிசிறி. |
| ௧௧௪ | நத்தவர்-ஈண்டுநகாஞ்சிறப் புப்பொருண்மேற்று. "நக்கீரன்" என்றதில்நகரம் சிறப்புப்பொருடருதல்உச் சிமேற்புலவர் கொள் நச்சி னார்க்கினியர் உரைத்தவாற் றனுமுணர்க. |
| ௧௧௬ | நாதாந்தம்-ஞானநிலைகளில் ஒன்று. |
| ௧௧௮ | சேண்டலம்-சுவர்க்கம். |
| ௧௨௩ | கான்முளை-குழந்தை. |
| ௧௨௫ | கனம்- வேதசுவரத்தின்ஒ ன்று. |
| ௧௨௭ | ஏதம்-குற்றம். |
| ௧௨௯ | நாணம்-ஸ்நாணம். |
| ௧௩௨ | சாலி-சப்பட்டை. அல்லது. பதர் |
| ௧௩௪ | மங்குல்-மேகம், |
| ௧௩௬ | அப்பு-ஜலம். |
| ௧௩௭ | முழவம்-முரசு |
| ௧௩௯ | செய்-வயல். |
| | கனமழை-பெருமழை. |
| ௧௪௦ | கந்து யானைகட்டுந்தறி. |
| | அமரும்-போர்க்கும். |
| ௧௪௧ | சாகை-மரக்கொப்பு. |
| | உரம்-திடம்,ஊக்கம். |
| ௧௪௨ | குடம்பை-கூடு. |
| | துணைந்து-விரைந்து. |

| செய்யுளெண். | அரும்பதவுரை. |
|---|---|
| கசரு | க. வதுபதம்-குழைவு. |
| | உ. வதுபதம்-சோறு. |
| கசசு | நந்திடவே-வருந்திடவே |
| | தண்கதிரோன்-சந்திரன். |
| கசஎ | செங்கதிரோன்-சூரியன். |
| கசஅ | விமலம்-அழகு,அழுக்கின்மை. |
| கருக | கைதவன்-வஞ்சகன். |
| கருரு | நாரி-ஸ்திரீ. |
| கசுக | ருளரிமகள்-ருக்மணி. |
| கசுஅ | கரிசு-குற்றம். |
| கசுகூ | காமர்-அழகு. |
| கஎஎ | ஆர்வம்-சந்தோஷம். |
| கஎஅ | சிலதியர்-தோழியர். |
| கஎகூ | புனைவித்தான்-அலங்கரித்தான். |
| கஅ0 | தைவந்தான்-தடவினன். |
| | அமளி-படுக்கை. |
| கஅங | வேய்-மூங்கில். |
| | இழுக்கு-குற்றம். |

## வைதந்தகாண்டம்.

| செய்யுளெண். | அரும்பதவுரை. |
|---|---|
| | உவணம்-கருடன். |
| | பா-பரவிய. |
| ரு | இறும்பூது-ஆச்சரியம். |
| எ | புத்தேள்-தெய்வம். இங்குபரமசிவம். |
| கூ | பல்லியம்-வாத்தியம். |
| கச | பீடு-பெருமை. |
| கரு | நத்திடுவான்-விரும்பும்படி |
| கசு | வடு-குற்றம். |
| கஎ | திரை-அலை. |
| உக | தொங்கல்-பூமாலை. |
| உஅ | கீறல்-கிழித்தல். |
| ஙக | அற்பார்-அன்புநிறைந்த. |
| | பொற்பு-அழகு. |
| ஙசு | மன்றல்-விவாகம். |
| ஙஅ | கற்பு-முல்லைக்கொடி. |
| ச0 | வன்மீகம்-புற்று. |
| சக | முன்-கருதல். |
| சச | புலிங்கம்-தீப்பொறி. |
| | கொங்கு-வாசனை. |
| சரு | குரு-நிறம்,பெருமை. |
| சஎ | துப்பிதழ்-பவளபோன்றவுதடு. |
| | பொலிவு-அழகு. |
| சஅ | காலும்-வடியும். |
| ருச | சமரம்-போர். |
| | வேள்-மன்மதன். |
| | திமிரம்-இருள். |

| செய்யுளெண். | அரும்பதவுரை. | செய்யுளெண். | அரும்பதவுரை. |
|---|---|---|---|
| ௫௫ | என்றன்- என்பேரிலுள்ள விரகம்-காமநோய். | | இங்கு நரசிம்மக் கடவுள். |
| ௫௬ | பொன்-அழகு. நறவு-தேன். | ௯0 | செவி-அழகு. செவ்வியென்னும்சொல்லின்சிதைவு. அம்மான்-அழகிய மஹான். மான் என்பது மஹான் என்னும் வடசொல்லின் சிதைவு. |
| ௫௭ | கடி-வாசனை. | | |
| ௬௧ | பாட்பம்-கண்ணீர். | | |
| ௬௬ | நீராஞ்சனம்- கண்ணூறுகழிக்குமோர்வகை யாலாத்தி. | ௧0௨ | திரு-செல்வம். |
| ௬௯ | கலன்-ஆபரணம். | ௧0௩ | சிந்தாகுலம்-மனக்கவலை. |
| ௭௭ | பங்கம்-குற்றம். | ௧0௪ | பொனையே-இலக்குமியையே. |
| ௭௯ | ஆறு-அழியாத. | | |
| ௮௨ | அடலரி-வலிமிகுந்த சிங்கம். | ௧0௭ | விற்பனர்-கற்றோர். |

தசேலவேண்பா அரும்பதவுரை முற்றிற்று.

உ

# செய்யுள் முதற்குறிப்பகராதி.


| செய்யுள்முதற்குறிப்பு. | பக்கம். | செய்யுள்முதற்குறிப்பு. | பக்கம். |
|---|---|---|---|
| அகழுமதிலு ... | ௨௭ | அல்லல் ... | ௧௬ |
| அக்காலகிலமதை ... | ௬௨ | அவலில் ... | ௫௧ |
| அக்காலை ... | ௫௪ | அழுந்துபசி ... | ௯ |
| அஞ்சாத ... | ௨௭ | அறஞ்சிறிதோர் ... | ௫௪ |
| அணைந்தோ ... | ௧௮ | அறன்முதலா ... | ௨௫ |
| அந்தணரே ... | ௩௪ | அன்பருக்கே ... | ௫௩ |
| அந்தணரை ... | ௭௦ | அன்பர்க்கெளி ... | ௧ |
| அந்தணன் ... | ௧௭ | அன்பிற்கிடைத்த ... | ௫௧ |
| அந்தணன்ற ... | ௬௬ | அன்றியுமே ... | ௫௩ |
| அந்தப்புரம் ... | ௩௮ | அன்றிரவோர் ... | ௫௬ |
| அந்நாள் ... | ௩௧ | அன்றுதிருமால் ... | ௨௬ |
| அந்நீணகர் ... | ௫ | அன்றுமிக ... | ௩௯ |
| அப்பொழுது ... | ௪௭ | அன்றுவிடத்தை ... | ௫௨ |
| அத்பொழுதுசையாதி... | ௬௪ | அன்னதுதான் ... | ௪௧ |
| அப்போதகம் ... | ௬௦ | அன்னோர்தம் ... | ௪௫ |
| அமரர்நோய் ... | ௬௫ | ஆக்கம்படைத்தோர் ... | ௧௬ |
| அமிர்தம் ... | ௫௯ | ஆடுவார் ... | ௩௬ |
| அம்மா ... | ௧௨ | ஆதலாலன்ப ... | ௭௩ |
| அயனுலகும் ... | ௫௮ | ஆதலாலைய ... | ௭௩ |
| அருவத்தார் ... | ௨௦ | ஆதலினலாரியனே ... | ௪௧ |
| அருளாற் ... | ௬௮ | ஆதலினலைய ... | ௩௩ |
| அருள்சேரு ... | ௪௧ | ஆதலினற் ... | ௫௩ |
| அலரவன் ... | ௧௬ | ஆதிநாள் ... | ௩௬ |

| செய்யுள்முதற்குறிப்பு. | பக்கம். | செய்யுள்முதற்குறிப்பு. | பக்கம். |
|---|---|---|---|
| ஆதிநாளைய ... | ௩௯ | இலக்கணமே ... | ௪௧ |
| ஆலே .. | ௩௩ | இவையனைத்தும் ... | ௫௭ |
| ஆவாவிவ் ... | ௩௭ | இவ்வகைய ... | ௨௪ |
| ஆவியனையாய் ... | ௬௭ | இவ்வண்ணம் ... | ௧௨ |
| இங்கேநீர் ... | ௭௧ | இவ்விதமாய் ... | ௬௮ |
| இங்ஙனளித்தி ... | ௫௦ | இவ்வேந்தர் ... | ௩௩ |
| இங்ஙனிவ ... | ௧௧ | இனியவுண ... | ௫௦ |
| இங்ஙன் .. ... | ௪௨ | இன்பமதை ... | ௩௫ |
| இடித்தொளி ... | ௬௭ | இன்றிரா ... | ௨௧ |
| இடியே ... | ௪௮ | இன்றே ... | ௪௩ |
| இதுவரையும் ... | ௩௮ | இன்னசொற் .. | ௨௯ |
| இதுவறிந்தும் ... | ௨௨ | இன்னதவத் ... | ௯ |
| இத்தகைய ... | ௩௫ | இன்னநகர் ... | ௨௬ |
| இத்தகையவெப்பில் ... | ௨௧ | இன்னபல ... | ௫௮ |
| இத்தலைவாய் ... | ௩௩ | இன்னவறுமை ... | ௧௪ |
| இந்தவிதநாமயங்கி ... | ௬௯ | இன்னவிதமேந்திழை... | ௬௭ |
| இந்தவிதமாதர் ... | ௫௫ | இன்னவிதம் ... | ௪௩ |
| இந்தவிதம் ... | ௫௨ | இன்னவுரை ... | ௬௬ |
| இந்திரநீன் ... | ௫௯ | இன்னவெலாம் ... | ௫௦ |
| இப்பொழுதே .. | ௬௪ | இன்ன வெலாங்கண்டே. | ௬௦ |
| இம்மாநகர் ... | ௭ | இன்னவெழில் ... | ௩௮ |
| இம்மாமறையோன் ... | ௩௬ | இன்னே ... | ௪௦ |
| இம்மையிலே ... | ௩௪ | இன்னோர் ... | ௩௬ |
| இம்மையிலேயெச்சுகமு. | ௩ | ஈங்கிவனிவ் ... | ௬௨ |
| இருந்தனந்தாம் ... | ௨௬ | ஈசனடி ... | ௨ |
| இருபுறமார் ... | ௬௦ | உலகந்தனை ... | ௩௫ |
| இருவினை ... | ௨௫ | ஊற்றுகின்ற ... | ௪௮ |

| செய்யுள்முதற்குறிப்பு. | பக்கம். | செய்யுள்முதற்குறிப்பு. | பக்கம். |
|---|---|---|---|
| எங்குமுளன் ... | ௭௦ | கட்பகை ... | ௨௩ |
| எத்தனைபேர் ... | ௪௫ | கண்டான் ... | ௭௧ |
| எப்பிறப்பே ... | ௭௨ | கண்டு ... | ௫௦ |
| எப்பொருள்யார் ... | ௩ | கண்ணனடி ... | ௭௪ |
| எம்மானருளால் ... | ௫௬ | கண்ணனனு ... | ௪௦ |
| எம்மான்றரு ... | ௧௮ | கண்ணனை ... | ௧௫ |
| எல்லாவுயிர்க் ... | ௬௯ | கண்ணனைநேர் ... | ௨௯ |
| எளியேன் ... | ௨௯ | கண்ணன் ... | ௧௮ |
| என்செய்தாய் ... | ௬௪ | கண்ணன்கருமேனி ... | ௬ |
| என்செய்வேன் ... | ௨௪ | கண்ணுரு ... | ௭௧ |
| என்றசுகமுனிவன் ... | ௭௪ | கதிருதிக்குங் ... | ௫௪ |
| என்றசுகனடி ... | ௬௨ | கந்தமலருந் ... | ௨௦ |
| என்றுபல ... | ௭௨ | கந்தமூலம் ... | ௬௧ |
| என்றுமுலையா ... | ௧௮ | கந்தையவல் ... | ௭௦ |
| என்னதுயர் ... | ௨௨ | கந்தையிலார் ... | ௩௪ |
| ஏதிலாராவி .. | ௩௨ | கந்தையுடுப்பார் ... | ௩௬ |
| ஏந்தெழிலே ... | ௬௫ | கருப்பையண்டத் ... | ௧௫ |
| ஏந்தெழிற்சீர் ... | ௨௮ | கலையுணர்ச்சி ... | ௪௯ |
| ஏற்பதிகழ்ச்சி .. | ௧௧ | கலையெல்லாம் .. | ௫௩ |
| ஏனைவழி ... | ௨௦ | கல்விதனை ... | ௫௦ |
| ஐயனடி ... | ௪௩ | கல்வியயி ... | ௩௦ |
| ஐயன்வர ... | ௫௭ | கற்பகத்தையிங் ... | ௩௫ |
| ஒருமகவுக் ... | ௧௧ | கற்பகத்தைச்சார் ... | ௨௨ |
| ஒருமூன்று ... | ௭ | கற்பார் ... | ௬௧ |
| ஓதியநாள் ... | ௩௧ | கற்புருவாய் ... | ௫௨ |
| கங்கைமுதல் ... | ௩௭ | கனமதிலே ... | ௪௮ |
| கட்டியணை ... | ௫௫ | காக்குங்கிளை ... | ௩௯ |

| செய்யுள்முதற்குறிப்பு. | பக்கம். | செய்யுள்முதற்குறிப்பு. | பக்கம். |
|---|---|---|---|
| காண்டலுமே ... | ௪௨ | கொலைகளவ ... | ௩௬ |
| காதமிருந்தாலும் ... | ௪௭ | கொல்லுகின்ற .. | ௫௬ |
| காதலினே ... | ௧௧ | கோடிபொன் ... | ௧௩ |
| காதிற் ... | ௫௬ | கோதிலா ... | ௩௧ |
| காந்தனுடல் ... | ௧௦ | கோதில் ... | ௧௦ |
| காந்தனுடன் ... | ௬௫ | கோதைமட ... | ௬ |
| காந்தனுரை ... | ௧௯ | கோயின் ... | ௨௮ |
| காந்தன் ... | ௫௨ | சங்கந்தனை ... | ௨௩ |
| காய்ந்தனை ... | ௬௧ | சந்தனமே ... | ௬௭ |
| காயமளா ... | ௫ | சந்திசெபம் ... | ௯ |
| காயவழி ... | ௬ | சரியைமுதல் ... | ௮ |
| காளையர்கள் ... | ௩௨ | சற்றேயிவ ... | ௩௭ |
| காற்றுமழை ... | ௪௯ | சாரன்முகம் ... | ௩௨ |
| கானத்திடை ... | ௭௨ | சாலவுமே ... | ௩௮ |
| கானத்தொரு ... | ௭ | சாற்றும் ... | ௪௮ |
| கிள்ளத்தசை ... | ௬௧ | சிந்தைகளி ... | ௩௯ |
| குணமேறி ... | ௮ | சிந்தைசிவமாம் ... | ௬௫ |
| குருந்தையடி ... | ௪௯ | சிந்தையது ... | ௫௬ |
| குன்றனைய ... | ௬௪ | சிறியோர் ... | ௩௭ |
| குன்றாத ... | ௫௫ | சிட்டர்திறம் ... | ௮ |
| குன்றெடுத்து ... | ௨௯ | சீரார்சின் ... | ௪௬ |
| கேசவன்பால் ... | ௬௮ | சீருடனே ... | ௩௦ |
| கேடென்றிவை ... | ௧௭ | சீலமிகு ... | ௬௫ |
| கேட்டபொழுதே ... | ௪௦ | சுட்டிநுதல் ... | ௬௭ |
| கேட்டார் ... | ௩௯ | சுட்டிமுதல் ... | ௧௨ |
| கைதலைமே ... | ௨௮ | சும்மாவிருக்கும் ... | ௫௩ |
| கைநனைய ... | ௪௮ | சும்மாவிருந்தேனை ... | ௩ |

| செய்யுள்முதற்குறிப்பு. | பக்கம். | செய்யுள்முதற்குறிப்பு. | பக்கம். |
|---|---|---|---|
| செங்கதிரும் ... | ௭௧ | திலகமண் ... | ௪௨ |
| செங்கரமே ... | ௨௫ | தீங்குயிலேய் ... | ௩௨ |
| செந்தமிழ்தேர் ... | ௨௬ | தீதிலரு ... | ௧௭ |
| செந்தாமரை ... | ௩௩ | தீதிற்றிரௌபதை ... | ௪௮ |
| செந்திருவந் ... | ௬௨ | துட்டாக ... | ௧௪ |
| செம்பொன் ... | ௩௮ | தும்பைமல ... | ௪௩ |
| செய்தவவல் ... | ௧௯ | தெய்வம் ... | ௧௯ |
| செல்வமகள் ... | ௧௦ | தெருவினெழில் ... | ௨௭ |
| செல்வாது ... | ௩௦ | தேசாரசுவினி ... | ௬௬ |
| சேரவுடல் ... | ௧௦ | தேட்டாச்சுவை ... | ௫௧ |
| சேர்த்தநீ ... | ௧௧ | தேரினிழிந்து ... | ௬௬ |
| சேனைபுடை ... | ௩௨ | தோமனைத்தும் ... | ௬ |
| சொல்லமுத ... | ௪௩ | நங்குரவ ... | ௪௭ |
| சொல்லியவவ் ... | ௧௫ | நடுநிலைமை ... | ௫௯ |
| தண்டுவரை ... | ௨௩ | நட்பே ... | ௪௫ |
| தத்துவங்கள் ... | ௨ | நம்பகையை ... | ௨௦ |
| தந்தைதாய் ... | ௩௦ | நல்லோர் ... | ௪௫ |
| தவம்புரியும் ... | ௬௨ | நல்லோரும் ... | ௬௦ |
| தழுலோம்பி ... | ௮ | நன்னிலமே ... | ௧௭ |
| தற்போதம் ... | ௨௬ | நாகசுர ... | ௪௬ |
| தனக்கோர் ... | ௭௧ | நாணமுதல் ... | ௧௦ |
| தனியே ... | ௨௨ | நாதாந்த ... | ௪௪ |
| தன்னூர்ப்புறம் ... | ௫௮ | நானமுதல் ... | ௪௬ |
| தன்னையறியும் ... | ௩௬ | நிதியாரளகை ... | ௩௧ |
| தாயார் ... | ௧௭ | நிலனுற் ... | ௮ |
| தாயெதிரே ... | ௫௫ | நீருற்ற ... | ௬௪ |
| திங்களொடு ... | ௩௮ | நெடுநா ... | ௨௯ |

| செய்யுள்முதற்குறிப்பு. | பக்கம். | செய்யுள்முதற்குறிப்பு. | பக்கம். |
|---|---|---|---|
| நென்னலுண்ட ... | ௩௦ | பிடியவற்கே ... | ௫௩ |
| நேர்ந்தமிழ் ... | ௧௩ | பிடியினங்கள் ... | ௪௦ |
| பக்கத்து ... | ௧௨ | பித்தருன்மத்தர் ... | ௪௪ |
| பசியறிந்து ... | ௫௨ | பிறந்திடும் ... | ௧௬ |
| பண்டுகடல் ... | ௬௯ | பின்போர் ... | ௫௨ |
| பண்ணார் ... | ௭௨ | புற்றினகண் ... | ௬௩ |
| பந்தனைதா ... | ௫௦ | புன்புலால் ... | ௪௬ |
| பலநாட்க ... | ௫௧ | பூக்கொய்வான் ... | ௬௩ |
| பல்லனைத்தும் ... | ௧௧ | பூணூரலே ... | ௩௨ |
| பல்லியமே ... | ௫௭ | பூண்டதனை ... | ௪௪ |
| பல்லியமேயார்ப்ப ... | ௬௦ | பூமகடன் ... | ௫௪ |
| பல்லுலகம் ... | ௨௯ | பூமகளோ ... | ௬௩ |
| பழங்கந்தை ... | ௫௮ | பூமாது ... | ௭௧ |
| பள்ளமதில் ... | ௬௯ | பேருலகம் ... | ௬௨ |
| பற்றறற்றோனும் ... | ௬௫ | பைம்பொற் ... | ௬௮ |
| பற்றறற்றானுக்கிப் ... | ௬௨ | பைந்துளவ ... | ௧௯ |
| பன்மணிவாய் ... | ௪௧ | பொங்கியெழும் ... | ௬௩ |
| பாங்காய் ... | ௫௧ | பொற்குலையும் ... | ௬௭ |
| பாங்கியர்தம் ... | ௬௪ | பொற்பின் ... | ௧௩ |
| பாசத்தளைநீத்து ... | ௨௫ | பொன்னவிரும் ... | ௧௪ |
| பாசந்தனையறுத்து ... | ௧௬ | பொன்னுருவள ... | ௩௮ |
| பாம்பணைசேர் ... | ௨௪ | பொன்னார்வரை ... | ௫௭ |
| பாயவனத் ... | ௬௪ | போந்துமலர் ... | ௬௬ |
| பாருலகம் ... | ௫ | போரதனை ... | ௭௦ |
| பார்புகழும் ... | ௧ | மக்கடமை ... | ௧௫ |
| பார்ப்பான் ... | ௨௧ | மங்கலத்தின் ... | ௫௯ |
| பாவியவன் ... | ௬௯ | மஞ்சு ... | ௧௯ |

| செய்யுள்முதற்குறிப்பு. | பக்கம். | செய்யுள்முதற்குறிப்பு. | பக்கம். |
|---|---|---|---|
| மணிவார் ... | ௫௭ | மாந்தர் ... | ௩௪ |
| மண்டெரியா ... | ௫௭ | மாமதிலே ... | ௨௮ |
| மண்ணு ... | ௨௦ | மாமறையோன் ... | ௭௪ |
| மந்திரமா ... | ௯ | மாயோன் ... | ௫௫ |
| மருங்கில் ... | ௨௪ | மாவலிபால் ... | ௭௦ |
| மருமத்தயில் ... | ௭ | மிடியோர் ... | ௪௨ |
| மருவிநினை ... | ௭௩ | மின்னவிரும் ... | ௩௪ |
| மலர்வதனம் ... | ௫௪ | மின்னற்கொடி ... | ௬௭ |
| மழைபடியும் ... | ௮ | மின்னார் ... | ௨௮ |
| மறையெல்லாம் ... | ௩௭ | மின்னுகின்ற ... | ௩௧ |
| மற்படுகா ... | ௫௮ | மீண்டும் ... | ௭௩ |
| மற்றவன் ... | ௧௫ | மீனம் ... | ௨௩ |
| மற்றைவழி ... | ௨௨ | முத்தரிலக்கணம் ... | ௩௫ |
| மன்புற்றி ... | ௬௪ | முத்திக்கு ... | ௨௬ |
| மன்வரவு ... | ௪௦ | முத்திதனை ... | ௪௫ |
| மன்னனையே ... | ௪௧ | முத்தீ ... | ௨௭ |
| மன்னர்பலரிருக்க ... | ௫௫ | முற்றமுணர்ந்த . | ௪௮ |
| மன்னர்பலரும் ... | ௫௮ | முன்புநடந்த ... | ௧௯ |
| மன்னர்பலரை ... | ௬௫ | முன்புபடித்த ... | ௪௫ |
| மன்னர்முடி ... | ௨௨ | முன்பும் ... | ௭௩ |
| மனனுமுயிர் ... | ௧௩ | முன்பெத்தனை ... | ௧௭ |
| மாட்டும் ... | ௪௯ | முன்னாள் ... | ௪௭ |
| மாணிக்க ... | ௨௭ | முன்னுமவல் ... | ௫௧ |
| மாதரவர் ... | ௬௬ | மூவுலகு ... | ௭ |
| மாதவமே ... | ௪௬ | மூன்றுவரு ... | ௨௭ |
| மாதவமேசெய்து ... | ௫௬ | மெத்தியபல் ... | ௯ |
| மாந்தரெலாம் ... | ௭௦ | மெய்ப்பொருளை ... | ௬௯ |

| முதற்குறிப்பு. | பக்கம். | செய்யுள்முதற்குறிப்பு. | பக்கம். |
|---|---|---|---|
| மெய்ப்பொருடான் ... | ௭௩ | வாசக்கருங் ... | ௬ |
| மெல்லவெழுந்து ... | ௨௧ | வாசமலர் ... | ௨௦ |
| மென்காற் ... | ௩௩ | வாயில்காப்பாரை ... | ௨௮ |
| மேதி ... | ௩௧ | வாரிதனில் ... | ௭௪ |
| மேனுள் ... | ௬௯ | வாழ்ந்தனமே ... | ௬௦ |
| மைந்தரனமின்றி ... | ௧௩ | விரைசேரும் ... | ௪௩ |
| மைந்தர்தமக்கிரங்கி ... | ௧௮ | வில்லேந்து ... | ௩௦ |
| மைந்தர்தமக்கிரங்கி வாடும் ... | ௧௫ | வீட்டிலைகண் ... | ௬௮ |
| மைந்தர்வருந் ... | ௪௬ | வெஞ்சடம் ... | ௭௨ |
| மோதுகின்ற ... | ௪௮ | வெம்மை ... | ௧௩ |
| யாரென்றறிந் ... | ௩௪ | வெய்யோனகல ... | ௨௧ |
| யாவரிடத்தும் ... | ௬௧ | வெய்யோனுதி ... | ௪௯ |
| யோகமது ... | ௬௩ | வெய்யோன்வழி ... | ௨௩ |
| வங்கமுகை ... | ௨௪ | வெருக்கொண்டு ... | ௬௩ |
| வந்தமுனி ... | ௫ | வெள்ளியமா ... | ௫௯ |
| வந்தனைதான் ... | ௬௭ | வேசையே ... | ௬௮ |
| வந்தவிருந் ... | ௬ | வேதசிகை ... | ௨ |
| வருவிருந் ... | ௧௦ | வேதந்தெளித்த ... | ௨ |
| வழிவந்திலை ... | ௪௪ | வேதமது ... | ௩௫ |
| வற்றியெனும் ... | ௪௦ | வேதமதுவாழி ... | ௭௫ |
| வனப்பழிக்கும் ... | ௧௪ | வேதமுடி ... | ௭௨ |
| வன்றிணிய ... | ௩௭ | வேதமுடிவில் ... | ௪௨ |
| வாக்கிருந்தும் ... | ௧௬ | வேதமுதித்த ... | ௨௫ |
| வாங்குகடலினி ... | ௨௧ | வேதமுழக்கொலி ... | ௭ |
| வாங்குகடன்மீ ... | ௨௩ | வேதமே ... | ௯ |
| வாங்குசிலை ... | ௩௨ | வேறுமனை ... | ௧௨ |


செய்யுள் முதற்குறிப்பகராதி முற்றிற்று.